UNIVERSITY OF MADRAS

PRE-UNIVERSITY EXAMINATION

1970

PART II — TAMIL

SELECTIONS IN POETRY

DOCTRINA VIM PROMOVET INSITAM

UNIVERSITY OF MADRAS

Pre-University Examination
1970

PART II – TAMIL

SELECTIONS IN POETRY

77161

PRINTED AT
SANKAR PRINTERS
MADRAS

Copies may be had from the Registrar, University of Madras, University Buildings, Chepauk, Madras-5.

June 1968

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	புறநானூறு	...	1
	குறிப்புரை	...	58
2.	திருக்குறள்	...	6
	குறிப்புரை	...	62
3.	சிலப்பதிகாரம்	...	12
	குறிப்புரை	...	72
4.	பெரிய புராணம்	...	18
	குறிப்புரை	...	74
5.	கம்ப ராமாயணம்	...	28
	குறிப்புரை	...	83
6.	கலிங்கத்துப் பரணி	...	39
	குறிப்புரை	...	89
7.	வில்லிபுத்தூரார் பாரதம்	...	44
	குறிப்புரை	...	90
8.	முத்தொள்ளாயிரம்	...	50
	குறிப்புரை	...	91
9.	சரபேந்திர பூபால குறவஞ்சி	...	53
	குறிப்புரை	...	93
10.	மாரி வாயில்	...	56
	குறிப்புரை	...	94

1. புறநானூறு

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் மொழியில் எழுந்த பழைய இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் என வழங்கும். அவை 'பத்துப்பாட்டு,' 'எட்டுத் தொகை' எனும் இரு பெரும் பிரிவுகளுள் அடங்கும். எட்டுத் தொகை நூல்களில் ஒன்ருகத் திகழ்வது புறநானூறு ஆகும். எட்டுத் தொகையைச் சார்ந்த பிற நூல்கள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு என்பனவாம்.

'புறநானூறு' என்னுந் தொடர், ''புறப்பொருளைப் பற்றிக் கூறும் நானூறு பாடல்களைக் கொண்ட நூல்' என்று பொருள்படும். (இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை). மக்கள் அடைய வேண்டிய உறுதிப் பொருள்கள் நான்கினை அறம், பொருள், இன்பம், வீடு என்பர் பெரியோர். இந் நான்கனுள்ளும் அறம், பொருள் ஆகிய இரண்டையும் 'புறம்' என்றும், இன்பத்தை 'அகம்' என்றும் இரு வகையாகக் கூறுவது தமிழ் மரபாகும். ''வீடு'' என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலையுடையதாதலின், அதனை இலக்கண வகையால் கூறும் வழக்கமில்லை.

இப்பாடல்களைப் பாடிய புலவர்கள் ஓர் ஊரினரல்லர்; ஒரு காலத்தினரல்லர்; இதுபோன்றே இவர்களாற் பாடப் பெற்ற அரசர்களும், குறுநில மன்னர்களும், வள்ளல்களும் ஒரு நாட்டினரோ, ஊரினரோ, அல்லர். காலமிடையிட்டும் நாடிடையிட்டும் வாழ்ந்த நல்ல நெஞ்சம் வாய்க்கப் பெற்றவர்கள் அவர்கள்.

பாடினேரும் பாடப் பெற்ருேரும் வாழ்ந்த காலத்தினை இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் எனலாம்.

சங்க நூல்கள் பொருள் அடிப்படையிலும், அடிகளின் எண்ணிக்கை அடிப்படையிலும் பிற்கால அறிஞர்பெரு மக்களால் தொகுக்கப்பெற்றன என அறிகிறோம். புற நானூறு என்னும் நூலின் பெயரோ, அது நுவலும் பொருளி னையும், கொண்டுள்ள செய்யுட்களின் எண்ணிக்கையினையும் குறித்து நிற்கின்றது.

புறநானூறு பழந்தமிழகத்தில் அந்நாளில் சிறப்புடன் விளங்கிய சேர சோழ பாண்டியர்களாகிய முடியுடை மூவேந்தர், குறுநில மன்னர்கள், வரையாது வாரி வழங்கிய வள்ளல்கள், அமைச்சர், படைத்தலைவர், வீரர் முதலியோர் பலரின் வரலாறுகளைத் தெள்ளிதின் உணர்த்தி நிற்கிறது. பழங்காலத்தே வாழ்ந்த புலவர் பெருமக்களுடைய வரலாறு, தமிழ்நாட்டு நாகரிகம், பலவகை நீதிகள் முதலியனவற்றை அறிவதற்கு இந்நூல் கருவியாகத் துலங்குகின்றது. பாடல் கள் சொற்சுவையும் பொருட்சுவையும் கெழுமி மிளிர்கின் றன. இந்நூலின் பெருமையினையும் அருமையினையும் உணர்ந்த பிற்கால உரையாசிரியர்கள் பலரும் இந்நூற் செய்யுட்களை எடுத்தாண்டுள்ளனர்.

சுருங்கச் சொன்னால் பழந்தமிழர் தம் வாழ்வும் வரலா றும் புறநானூற்றின் வழி நன்கு புலனாகக் காணலாம். 'ஒரு காலத்தெழுந்த இலக்கியம் அக்கால வாழ்க்கைக் கண் ணாடி' என்னும் இலக்கியத் திறனாய்வாளர் சிலர் கொள்கை யினை அரண் செய்யும் நூல் புறநானூறு என்பது அங்கை நெல்லிக் கனி.

இங்கே பாடப் பகுதியாகக் கொடுக்கப்பட்டுள்ள ஐந்து பாடல்களும் மேற்காணும் கருத்துக்களை விளக்கி நிற்கக் காணலாம்.

1

திணை—பொதுவியல் துறை—பொருண்மொழிக்காஞ்சி

யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு மதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தானுழைச் சென்ற பிசிராந்தையாரை, 'கேட்குங்காலம் பலவாலோ? நரை நுமக்கில்லை யாலோ?' என்ற சான்றோர்க்கு அவர் சொற்றது.

2

திணை—பொதுவியல் துறை—பொருண்மொழிக்காஞ்சி

யாது மூரே யாவருங் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே.

கணியன் பூங்குன்றன் பாட்டு

3

திணை—பொதுவியல் துறை—பெருங்காஞ்சி

ஓரி னெய்தல் கறங்க வோரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்
பைத லுண்கண் பனிவார் புறைப்பப்
படைத்தோன் மன்றவப் பண்பி லாளன்
இன்னா தம்மவிவ் வுலகம்
இனிய காண்கித னியல்புணர்ந் தோரே.

பக்குடுக்கைநன்கணியார் பாடியது

4

திணை—பொதுவியல் துறை—பொருண்மொழிக்காஞ்சி

பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே.

நரிவெருஉத்தலையார் பாடியது

5

திணை—வாகை   துறை—மூதின்முல்லை

கெடுக சிந்தை கடிதிவ டுணிவே
மூதின் மகளி ராத றகுமே
மேனா ளுற்ற செருவிற் கிவடன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருந லுற்ற செருவிற் கிவள்கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுப்பட் டனனே
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
ஒருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே.

ஒக்கூர் மாசாத்தியார் பாடியது.

2. திருக்குறள்

தமிழ்நாடு செய்தவப் பயனுய்த் தோன்றியவர் திருவள்ளுவர்; இவர் இயற்றிய திருக்குறள் தமிழர் திருமறையாகவும் உலகப் பொதுமறையாகவும் திகழ்கின்றது. 1330 அருங்குறளும் மக்கள் இவ்வுலகில் பெறவேண்டிய அறம், பொருள், இன்பம் என்னும் முப் பொருள்களை முறையே கூறுகின்றன. குறட்பாக்களால் இயற்றப்பட்ட நூலைக் குறள் என்பது ஆகுபெயராகும்.

திருக்குறள் ஒப்புயர்வற்ற பெருநூல் என்பது அன்றே அறிஞர் கண்ட துணிபாம்.

> ''ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும்
> பாயிரத்தி னேடு பகர்ந்ததன்பின்—போயொருத்தர்
> வாய்க்கேட்க நூலுளவோ? மன்னு தமிழ்ப்புலவ
> ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்''

என்னும் நத்தத்தனர் வாக்கு (திருவள்ளுவமாலை) இதனை உணர்த்தும்.

காலங் கடந்தும் வாழுகின்ற பெருநூல் திருக்குறள் என்பது நன்கறியப்படும். பல்வேறு சமயத்தைச் சேர்ந்தவர்களும் தங்கள் தங்கள் நூல் என்று பாராட்டிப் பரிந்தெடுத்துக்கொள்ளும் அளவிற்குத் திருக்குறள் திகழ்கின்றது. உலகப் பெரியார்கள் வழங்கிய உயர்ந்த கருத்துக்கள் திருக்குறளின் தெளிந்த கருத்துக்களோடு ஒத்துள்ளன. திருக்குறள் சமய வேறுபாடுகளைக் கடந்த நூல் என்பது, ''சமயக் கணக்கர் மதிவழி கூறுது, உலகியல் கூறிப் பொருளிது'' என்று காட்டியதாகப் புலவர் ஒருவர் கூறியுள்ள பொருந்திய வுரையினின்றும் அறியலாம். எனவே காலங் கடந்தும், சமயங் கடந்தும், சாதி இன வேறுபாடுகளைக் கடந்தும் வாழும் ஒப்பற்ற உயர் நூலாகத் திருக்குறள் விளங்கக் காணலாம். சமயம் பரப்ப வந்த மேலை நாட்டுப் பெரியார்களின் நெஞ்சங்களையும் ஈர்த்த நூல் இதுவாகும். அதன் விளைவு உலகின்

பல மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுத் தமிழ்ச் சொத்து உலகச் செல்வமாகியுள்ள பான்மையினைக் காண்கின்றோம். இதனை யுணர்ந்தே ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்று பாரதியார் பொருத்தமுறப் பாடியுள்ளார்.

திருக்குறள் வாழ்க்கை யுண்மைகளைத் தெள்ளத் தெளிவாக எடுத்துமொழியும் நூலாகும். ''வாழ்க்கை விளக்க நூல்'' என்று இந்நூலினை வகையுற எடுத்து மொழியலாம். 'அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின் திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்' என்று கொடிஞாழன் மாணிபூதனார் என்னும் புலவர் பொருள் பொருந்தத் திருக்குறளைப் புகழ்கின்றார். ''சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய வந்த விருவினைக்கு மாமருந்து'' என்று கவுணியனாரும், ''ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி வேதப் பொருளாய் மிக விளங்கித் தீதற்றோர் உள்ளுதொறு முள்ளுதொறு முள்ள முருக்கு'' மென்று மாங்குடிமருதனாரும் கூறுவதனின்றும் திருக்குறளின் சிறப்பினைத் தெள்ளிதின் உணரலாம்.

திருவள்ளுவர்: திருக்குறளை இயற்றிய தெய்வப் புலவராம் திருவள்ளுவர் குறித்து இன்று நாட்டிலே நடமாடும் கதைகள் பலவாம். அவர் பிறப்பு, வளர்ப்பு, தொழில் முதலியனவற்றினைப் பலவகையாக அக் கதைகள் கூறுகின்றன. ஆயினும் அவையனைத்தும் உண்மைக்குப் புறம்பானவை என்று கற்றுவல்ல அறிஞர் உரைப்பர். புகழ் புரிந்த உலகப் பெரியார் பலரின் வரலாறு காலப்போக்கில் கட்டுக் கதைகள் சேர்ந்து வரலாற்றிற்குப் பொருந்தா வகையில் வழங்குவது உலகில் எங்கும் உண்டு.

திருவள்ளுவர் அறநெறி உணர்த்திய அறவோர்; செம்மை உணர்த்திய சான்றோர்; பொது நெறி வகுத்த புண்ணியர் என்று கூறி அமைதல் ஏற்புடைத்தாம்.

இவர் வாழ்ந்த காலம் பற்றிப் பல கருத்துக்கள் வழங்குகின்றன. கி. மு. 31-ல் தோன்றியவரென மறைமலையடிகள் கொண்ட கருத்தினையொட்டியே, திருவள்ளுவர் பெயரால் ஆண்டுமுறை ஒன்றும் இருந்துவருகின்றது.

1. வாய்மை

வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல். 1

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின். 2

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். 3

உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன். 4

மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை. 5

பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும். 6

பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. 7

புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். 8

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 9

யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற. 10

2. வெகுளாமை

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென். 1

செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனின் தீய பிற. 2

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்த லதனான் வரும். 3

நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்தின்
பகையு முளவோ பிற. 4

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம். 5

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னும்
ஏமப் புணையைச் சுடும். 6

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. 7

இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. 8

உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின். 9

இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. 10

3. இன்னா செய்யாமை

சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 1

கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 2

செய்யாமற் செற்றார்க்கு மின்னாத செய்தபின்
உய்யா விழுமந் தரும். 3

இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல். 4

அறிவினா னாகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போற் போற்றாக் கடை. 5

இன்னா வெனத்தா னுணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல். 6

எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை. 7

தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல். 8

பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். 9

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். 10

4. ஊழ்

ஆகூழால் தோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்று மடி. 1

பேதைப் படுக்கு மிழவூழ் அறிவகற்றும்
ஆகலூ ழுற்றக் கடை. 2

நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும். 3

இருவேறு வுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு. 4

நல்லவை யெல்லாஅந் தீயவாம் தீயவும்
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு. 5

பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம. 6

வகுத்நான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்த லரிது. 7

துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியு மெனின். 8

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன். 9

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும். 10

3. சிலப்பதிகாரம்

''நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி யாரம் படைத்த தமிழ்நாடு'' என்றும், ''சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும் . . . தமிழ்ச் சாதியை அமரத்தன்மை வாய்ந்தது என்று உறுதி கொண்டிருந்தேன்'' என்றும் பாரதி யார் பாராட்டியுள்ளார். தமிழில் எழுந்த முதற் பெருங் காப்பியம் சிலப்பதிகாரமே. ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாக இதனைக் கருதுவர். கண்ணகிக்குக் கோயில் கட்டிச் சேர மன்னன் செங்குட்டுவன் விழாக் கொண்டாடிய பொழுது இலங்கைக் கயவாகு மன்னன் வந்திருந்ததனைக் கொண்டு சிலப்பதிகாரம் எழுந்த காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்று பெரும்பான்மையான அறிஞர்கள கருத்துக் கொள்கின்றனர்.

''சிலம்பினது அதிகரித்தலை உடைமையால் இது சிலப் பதிகாரம் என்னும் பெயர்த்தாயிற்று'' என்பர். 'சிலம் பினது அதிகரித்தல்' என்பது, சிலம்பினைச் சிறப்பாகக் கொண்டு காப்பியக் கதை அமைதல் என்று பொருள்படும். இச் செய்தியினையே 'சூழ்வினைச் சிலம்பு காரணமாக நாட்டு தும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்'' என்று பதிகம் குறிப்பிடக் காணலாம்.

சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம் என்பர். உலகின் முதற் பெருங் காப்பியங்களெல்லாம் முடிமன்னர்களைப் பற்றி எழுந்திருக்க, தமிழில் தோன்றிய முதல் காப்பியம் மக்களில் ஒருவரை, அவருள்ளும் ஒரு பெண்ணினைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு சிறப்புற அமைந்துள்ளது. திரு வள்ளுவர் பெருமானின் ''பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும் திண்மை யுண்டாகப் பெறின்'' என்னும்குறட் பாவிற்கு இலக்கியமாக அமைந்தது சிலப்பதிகாரம் எனலாம். சமண சமயத் துறவி கவுந்தியடிகள் ''இன்துணை மகளிர்க் கின்றி யமையாக் கற்புக்கடம் பூண்ட இத்தெய்வமல்லது

பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்'' என்று கண்ணகியைப் பாராட்டியுள்ளார். கண்ணகியின் கணவன் கோவலன், ''நாணமும் மடனும் நல்லோ ரேத்தும் பேணிய கற்பும் பெருந்துணையாக என்னொடு போந்தீங் கென்றுயர் களைந்த பொன்னே கொடியே புனைபூங் கோதாய் நாணின் பாவாய் நீணில விளக்கே கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி'' என்று பாராட்டக் காண்கின்றோம். தெய்வமேறப் பட்ட வேட்டுவ மகள் சாலினியும், ''இவளோ, கொங்கச்செல்வி குடமலை யாட்டி, தென்றமிழ்ப் பாவை செய்த தவக் கொழுந்து, ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய திருமா மணி'' என்று புகழ்ந்து கூறுகின்றாள். மேலும் சோழநாட்டிற் பிறந்த பெண் வஞ்சிக் காண்டத்து வாழ்த்துக் காதையில் ''பாண்டியன் தன் மகள்'' என்றும், ''வானவன் எங்கோ மகள்'' என்றும் உயருகின்ற பெருமையினைக் காண்கின்றோம்.

மன்னர், நீதியிற் சிறிது பிழைப்பினும், அவரை அறக் கடவுள் கூற்றாய் நின்று கொல்லும்; கற்புடை மகளிரை மக்களே அன்றித் தேவரும் முனிவரும் துதிப்பர்; இருவினையும் செய்த முறையே செய்தோனை நாடி வந்து, தம் பயனை நுகர்விக்கும் என்ற இம் மூன்று உண்மைகளையும் உலகத்திற்கு உணர்த்தவே சேரன் தம்பி சிலம்பை இசைத்ததாகப் பதிகங் கூறும. முத்தமிழும் விரவப் பெற்ற காப்பியமாதலால் 'இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுள்' என்றும், நாடக வுறுப்புக்களை உடையதாததால், 'நாடகக் காப்பியம்' என்றும், உரைப்பாட்டும் இசைப் பாட்டும் இடையிடையே விரவப் பெற்றதாதலால் 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்றும் சிலப்பதிகாரத்திற்குப் பல பெயர்கள் வழங்குகின்றன.

இந்நூல் சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்து விளங்குவது; தெள்ளிய இனிய நல்ல நடையுடையது; முடியுடை மன்னர் மூவர்தம் தலைநகரங்களாகிய புகார், மதுரை, வஞ்சி என்னும் மூன்றன் பெருமைகளையும் விளங்கக் கூறுவது; வரலாற்றிற்கு வழிவகுப்பது. இசைப்பாடல்கள் விரவிச் செவிக்கும் சிந்தைக்கும் இன்பம் பயக்கும் காவியம் இதுவாகும்.

சங்கப் புலவர் பலரும் தமிழ் நாட்டின் ஒவ்வொரு பகுதியையும் அதனை ஆண்ட மன்னனையும் மட்டுமே போற்றிப் பாடினராக, இளங்கோவடிகள் தமிழ்நாடு முழுவதனையும் முடிமன்னர் மூவரையும் ஒருங்கே போற்றித் தமிழகத்தில் புதியதொரு ஒற்றுமையுணர்ச்சியை வளர்க்க முயன்றார். காண்டங்களின் பெயர்வைப்பே இக் கருத்தினை நன்குணர்த்தும்.

இசை நாடகக் கலைகளைப் பற்றிய சிறந்த குறிப்புக்கள் சிலப்பதிகாரத்தில்தான் முதன் முதலில் மிகுதியாகக் காணப் பெறுகின்றன. தமிழ் கூறும் நிலத்தின் தன்மைகள், மன்னர் ஆட்சிமுறை, அக்காலச் சமயங்கள், வாணிகம், மக்கள் வாழ்க்கை முதலியவற்றைப் பற்றி இக்காப்பியத்தில் விரிவாகக் காணலாம்.

வழக்குரை காதை

கோப்பெருந் தேவி தீக்கனுப் பல கண்டு அவற்றை அரியணை மீதிருந்த தன் கணவனிடம் கூறிக்கொண்டிருந்தாள். அதுபொழுது கணவனை யிழந்த கண்ணகி பெருஞ்சீற்றத்துடன் அரண்மனை வாயிலை அடைந்து தன் வரவை வாயிற்காப்போன் வழி அரசனுக்கு அறிவித்தாள். அரசன் அழைக்க அவன்முன் சென்று அவன் கேட்பத் தன் ஊர் பெயர் முதலியனவற்றையும், தன் கணவன் முறை செய்யப் படாமற் கொல்லப்பட்ட கொடுங்கோன்மையினையும் அஞ்சாது எடுத்துக் கூறித் தன் கணவன் கள்வன் அல்லன் என்று தெரிவித்தற் பொருட்டுத் தன் சிலம்பினையுடைத்துக் காட்ட, அச் சிலம்பினின்றும் தெறித்த மாணிக்கப் பரல் அரசன் முன் தெறித்தது. அது கண்ட பாண்டியன் நெடுஞ்செழியன் நடுங்கி, 'பொற் கொல்லன் சொற்கேட்ட யானோ தவறுடையேன்; யானே கள்வன்; தென்புலக் காவல் என் முதற் பிழைத்தது; இன்றே கெடுக என் ஆயுள்' என்று கூறித் துயருற்று மயங்கித் தான் அமர்ந்திருந்த அரசு கட்டிலினின்றும் வீழ்ந்து துஞ்சினான். அது கண்ட பாண்டியனின் பெருந்தேவியும் கணவனை இழந்ததனாலாகிய கொடுந்துன்பத்தை எண்ணி வருந்தி, தானும் உயிர் துறந்தனள். இச் செய்திகளே நாம் இந்தக் காதையினால் அறிவனவாகும்.

வழக்குரை காதை

கனா உரைத்தல்

கோப்பெருந் தேவிசென்றுதன்
தீக்கனாத் திறமுரைப்ப
அரிமா னேந்திய வமளிமிசை யிருந்தனன்
திருவீழ் மார்பிற் றென்னவர் கோவே; இப்பால்

கண்ணகி அறிவிப்பு

வாயி லோயே வாயி லோயே
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்
திறைமுறை பிழைத்தோன் வாயி லோயே
இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளென்
றறிவிப் பாயே யறிவிப் பாயே, யென

வாயிலோன் மன்னனிடம் அறிவித்த செய்தி

வாயிலோன், வாழியெங் கொற்கை வேந்தே வாழி
தென்னம் பொருப்பிற் றலைவ வாழி
செழிய வாழி தென்னவ வாழி
பழியொடு படராப் பஞ்சவ வாழி
அடர்த்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீட மேறிய மடக்கொடி
வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை யல்லள்
அறுவர்க் கிளைய நங்கை யிறைவனை
ஆடல்கண் டருளிய வணங்கு சூருடைக்
கானக முகந்த காளி தாருகன்
பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளே,
கணவனை யிழந்தாள் கடையகத் தாளேயென

பாண்டியன் கண்ணகியை வினவல்

வருக மற்றிவட் டருக வீங்கென

வாயில் வந்து கோயில் காட்டக்
கோயின் மன்னனைக் குறுகினள் சென்றுழி
நீர்வார் கண்ணை யெம்முன் வந்தோய்
யாரை யோநீ மடக்கொடி யோயெனத்

கண்ணகியின் வழக்குரை

தேரா மன்னா செப்புவ துடையேன்

எள்ளறு சிறப்பி னிமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் டீர்த்தோ னன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்றன்
அரும்பெறற புதல்வனை யாழியின் மடித்தோன்

பெரும்பெயர்ப் புகாரென் பதியே யவ்வூர்
ஏசாச் சிறப்பி னிசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி யூழ்வினை துரப்பச்
சூழ்கழன் மன்னா நின்னகர்ப் புகுந்திங்

கென்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்பதென் பெயரேயெனப்,
பெண்ணணங்கே

பாண்டியன் உரைத்த மாற்றம்

கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று
வெள்வேற் கொற்றங் காணென வொள்ளிழை

கண்ணகி வெற்றி

நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
என்காற் பொற்சிலம்பு மணியுடை யரியே, யெனத்
தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை யரியே
தருகெனத் தந்து தான்முன் வைப்பக்

கண்ணகி யணிமணிக் காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதற் றெறித்தது மணியே,
கற்கண்டு

மன்னவின் மாண்பு

தாழ்ந்த குடையன் றளர்ந்தசெங் கோலன்
பொன்செய் கொல்லன் றன்சொற கேட்ட
யானோ வரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் னுயுளென

மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே தென்னவன்

கோப்பெருந்தேவியின் அறக் கற்பு

கோப்பெருந் தேவி குலைந்தன ணடுங்கிக்
கணவனை யிழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்
றிணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி.

4. பெரிய புராணம்

செயற்கருஞ் செயல்களைச் செய்த சிவனடியார்களின் வரலாற்றைக் கூறும் நூலாதலின் இந்நூல் பெரிய புராணம் என்று பெயர் பெற்றது. "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர் ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார் கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினர்" என்று அவ்வடியார்களின் இயல்பினைத் தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமான் குறிப்பர். இந் நூலுக்கு அவர் இட்ட பெயர் 'திருத் தொண்டர் புராணம்' என்பதாகும். 'அளவிலாத பெருமையராகிய அளவிலா அடியார் புகழ்' பாடியதால் 'தொண்டர் சீர் பரவுவார்' என்று சேக்கிழார் வழங்கப் பெறுகின்றார். திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் தாம் பாடிய சேக்கிழார் பிள்ளைத் தமிழில் "பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ" என்று பாராட்டிக் கூறியுள்ளார்.

பெரிய புராணம் சைவ சமயத்தைப் பற்றிய உண்மைகளை நன்கு அறிவதற்கு ஏற்ற நூல்களில் மிகச் சிறந்ததாக ஒளிர்கின்றது; இனிய எளிய நடையும், கவிச் சுவையும், கற்பனை நயமும் நிரம்பியது; அன்பின் வழி இறைவனை எளிதில் அடையலாம் என்பதனை இனிது எடுத்தியம்புவது. தவவொழுக்கம் மேற்கொண்டு உடம்பினை வருத்தி உள்ளொளி பெருக்கி நோற்பார்க்கு இறைவன் அருள் சுரப்பது போன்றே, அடிமைத்தொண்டு செய்து ஒதுங்கி வாழும் எளியோர்க்கும் எளிவந்து இரங்குவான் அருட்பெருங்கடவுள் என்பதனைத் தெற்றென விளக்கி நிற்பது இந் நூலாகும். 'சாதி, இனம், தொழில் இவற்றைக் கடந்தே இறைவன் உள்ளான் என்பதைக் காட்டி எல்லாரும் இனிது வணங்கத் தமிழகக் கோயில்கள் பயன்பட விழைந்த முதற் பெரியார் சேக்கிழாரே' என்பர் அறிஞர். பல்வேறு இனங்களைச்

சேர்ந்த அடியார்களையும் ஒத்த நிலையில் கண்டு அவர்தம் திருத்தொண்டின் திறத்தினை முறைட்படக் கூறும் தெய்வ நலங் கனிந்தொழுகும் தீந் தமிழ்ப் பனுவலாகச் சேக்கிழார் இயற்றிய பெரிய புராணம் நின்று நிலவுகின்றது. இடைக் காலத் தமிழ்ப் பண்பாட்டினை இனிய எளிய முறையில் எடுத்தியம்பும் நூல் இஃதெனலாம்.

சேக்கிழார், தொண்டை நாட்டில் புலியூர்க் கோட்டத்துக் குன்றத்தூரினர். அநபாய சோழனின் அமைச்சராய்த் துலங்கியவர். இவர்தம் இயற் பெயர் அருண்மொழித் தேவர் என்றும், குடிப் பெயர் சேக்கிழார் என்றும் கூறுவர். இவருடைய காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றுண்டின் முற்பகுதியாகும்.

அப்பூதியடிகள்:—திருநாவுக்கரசரை முன் காணுத நிலையிலும் அவர்தம் வரலாற்றினையும் திருத்தொண்டினையும் கேள்வியுற்ற அளவிலே திங்களூரில் வாழும் அந்தணராம் அப்பூதியடிகளார் அவர்பால் ஆராத அன்பு செலுத்தினர். தம்முடைய பிள்ளைகளுக் கெல்லாம் திருநாவுக்கரசர் தம் திருப்பெயரினையே இட்டு வழங்கி வந்தார். மடங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் முதலாயுள்ள முடிவிலா அறங்களை முறைமையாகத் திருநாவுக்கரசர் திருப் பெயர் சார்த்திச் செய்து வந்தார். திருநாவுக்கரசர் திங்களூருக்கு வருகிருர். தம்முடைய பெயர் தண்ணீர்ப் பந்தலுக்கு வழங்கக் காண்கிருர். அப்பூதியடிகளை அவர் வீடு சென்று காண்கிருர். வந்தவர் இன்னுர் என அறிந்தவுடன் அப்பூதியடிகளார் அகங் குளிர்ந்து போகிருர். ''அற்றவர்கள் அருநிதியம் பெற்ருற்போல்'' அனைவரும் மகிழ்ந்து வந்தணைந்த வாகீசர்க்கு விருந்தோம்பல் மேற்கொள்கின்றனர். வாழைக் குருத்து அரிந்துவரச் சென்ற மூத்த பிள்ளையை அரவு தீண்டுகிறது. விடத்தினுல் வீழ்ந்த பிள்ளையை மறைத்துப் பெற்ருேர் வந்த பெரியார்க்கு விருந்து படைக்க முற்படுகின்றனர். திருநாவுக்கரசர் நிகழ்ந்ததுணர்ந்து பதிகம் பாடி அப்பிள்ளையை எழுப்பியருளுகிருர். அன்பின் ஆற்றலை அழகுறக் கிளத்தும் நயமுடைய வரலாறே நமக்கு இங்குப் பாடமாக வந்துள்ள பகுதியாகும்.

அப்பூதியடிகள் நாயனர் புராணம்

அப்பூதியடிகளின் அளவிலா அன்பு

1. தாண்டவம் புரிய வல்ல தம்பிரா னுருக் கன்ப
ரீண்டிய புகழின் பாலா ரெல்லையி றவத்தின் மிக்கா
ராண்டசீ ரரசின் பாத மடைந்தவ ரறியா முன்னே
காண்டகு காதல் கூரக் கலந்தவன் பினரா யுள்ளார்.

2. களவுபொய் காமங் கோப முதலிய குற்றங் காய்ந்தார்
வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினுர் மனைப்பா லுள்ள
வளவைக ணிறைகோன் மக்க ளாவொடு மேதி மற்று
முளவெலா மரசி னுமஞ் சாற்றுமவ் வொழுக லாற்ருர்.

3. வடிவுதாங் காணு ராயு மன்னுசீர் வாக்கின் வேந்த
ரடிமையுந் தம்பி ரானு ரருளுங்கேட் டவர்நா மத்தாற்
படிதிகழ் மடங்க டண்ணீர்ப் பந்தர்கண் முதலா யுள்ள
முடிவிலா வறங்கள் செய்து முறைமையால் வாழுநாவில்

திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தரினைக் காணுதல்

4. பொருப்பரையன் மடப்பிடியி னுடன்புணருஞ் சிவக்களிற்றின்
றிருப்பழனம் பணிந்துபணி செய்திருநா வுக்கரச
ரொருப்படுகா தலிற்பிறவு முடையவர்தம் பதிவணங்கும்
விருப்பினெடுந் திங்களூர் மருங்குவழி மேவுவார்.

5. அளவில்சனஞ் செலவொழியா வழிக்கரையி லருளுடையா
ருளமனைய தண்ணளித்தா யுறுவேனிற் பரிவகற்றிக்
குளநிறைந்த நீர்த்தடம்போற் குளிர்தூங்கும் பரப்பினதாய்
வளமருவு நிழறருதண் ணீர்ப்பந்தர் வந்தணைந்தார்.

6. வந்தணைந்த வாகீசர் மந்தமா ருதசீதப்
பந்தருட னமுதமாந் தண்ணீரும் பார்த்தருளிச்
சிந்தைவியப் புறவருவார் திருநாவுக் கரசெனும்பேர்
சந்தமுற வரைந்ததனை யெம்மருங்குந் தாங்கண்டார்.

வாகீசர் விடுத்த வினவும் பெற்ற மறுமொழியும்

7. இப்பந்த ரிப்பெயரிட் டிங்கமைத்தா ரியாரென்றார்க்
கப்பந்த ரறிந்தார்க ளாண்டவர செனும்பெயராற்
செப்பருஞ்சீ ரபபூதி யடிகளார் செய்தமைத்தார்
தப்பின்றி யெங்குமுள சாலைகுளங் காவென்றார்.

8. என்றுரைக்க வரசுகேட் டிதற்கென்னோ கருத்தென்று
நின்றவரை நோக்கியவ ரெவ்விடத்தா ரெனநிறைந்து
துன்றியநூன் மார்பருமித் தொல்பதியார் மனையின்கட்
சென்றனரிப் பொழுததுவுஞ் சேய்த்தன்று நணித்
தென்றார்.

அப்பூதியடிகளும் ஆளுடைய அரசும் சந்தித்தல்

9. அங்ககன்று முனிவரும்போ யப்பூதி யடிகளார்
தங்குமனைக் கடைத்தலைமுன் சார்வாக வுள்ளிருந்த
திங்களூர் மறைத்தலைவர் செழுங்கடையில் வந்த
டைந்தார்
நங்கள்பிரான் றமரொருவ ரெனக்கேட்டு நண்ணினார்.

10. கடிதணைந்து வாகீசர் கழல்பணிய மற்றவர்தம்
மடிபணியா முன்பணியு மரசினெதி ரந்தணனார்
முடிவிறவஞ் செய்தேன்கொன் முன்பொழியுங்
கருணைபுரி
வடிவுடையீ ரென்மனையில் வந்தருளிற் றென்னென்றார்.

11. ஒருகுன்ற வில்லாரைத் திருப்பழனத் துள்ளிறைஞ்சி
வருகின்றோம் வழிக்கரையி னீர்வைத்த வாய்ந்தவளந்
தருகின்ற நிழற்றண்ணீர்ப் பந்தருங்கண் டத்தகைமை
புரிகின்ற வறம்பிறவுங் கேட்டணைந்தோ
மெனப்புகல்வார்.

'வேறொரு பேர்' எனும் வாசகம் விளைத்த சீற்றம்

12. ஆறணியுஞ் சடைமுடியா ரடியார்க்கு நீர்வைத்த
வீறில்பெருந் தண்ணீர்ப்பந் தரினும்பே ரெழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா
ரணமென்கொல்
கூறுமென வெதிர்மொழிந்தார் கோதின்மொழிக்
கொற்றவனார்.

13. நின்றமறை யவர்கேளா நிலையழிந்த சிந்தையராய்
நன்றருளிச் செய்திலீர் நாணிலமண் பதகருட
னென்றியமன் னவன்சூழ்ச்சி திருத்தொண்டி
னுறைப்பாலே
வென்றவர்தந் திருப்பேரோ வேறொருபே
ரெனவெகுள்வார்.

14. நம்மையுடை யவர்கழற்கீழ் நயந்ததிருத் தொண்டாலே
யிம்மையிலும் பிழைப்பதென வென்போல்வா
ருந்தெளியச்
செம்மைபுரி திருநாவுக் கரசர்திருப் பெயரெழுத
வெம்மைமொழி யான்கேட்க விளம்பினீ ரெனவிளம்பி

அப்பூதியடிகளின் வினவும் அப்பர் பெருமானின் பணிவும்

15. பொங்குகடற் கன்மிதப்பிற் போந்தேறு மவர்பெருமை
யங்கணரும் புவனத்தி னறியாதா ரியாருளரே
மங்கலமாந் திருவேடத் துடனின்றிவ் வகைமொழிந்தீ
ரெங்குறைவீர் நீர்தாம்யா ரியம்புமென வியம்பினார்.

16. திருமறையோ ரதுமொழியத் திருநாவுக் கரசரவர்
பெருமையறிந் துரைசெய்வார் பிறதுறையி னின்றேற
வருளுபெருஞ் சூலையினா லாட்கொள்ள வடைந்துய்ந்த
தெருளுமுணர் வில்லாத சிறுமையேன் யானென்றார்.

அப்பூதியடிகள் உற்ற விம்மிதம்

17. அரசரிய வுரைசெய்ய வப்பூதி யடிகடாங்
கரகமல மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய
வுரைகுழறி யுடம்பெல்லா முரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தம் சரணகம லம்பூண்டார்.

18. மற்றவரை யெதிர்வணங்கி வாகீச ரெடுத்தருள
வற்றவர்க ளருநிதியம் பெற்றார்போ லருமறையோர்
முற்றவுளங் களிகூர முன்னின்று கூத்தாடி
யுற்றவிருப் புடன்சூழ வோடினார் பாடினார்.

19. மூண்டபெரு மகிழ்ச்சியினான் முன்செய்வ தறியாதே
யீண்டமனை யகத்தெய்தி யில்லவர்க்கு மக்களுக்கு
மாண்டவர செழுந்தருளு மோகையுரைத் தார்வமுறப்
பூண்டபெருஞ் சுற்றமெலாங் கொடுமீளப்புறப்பட்டார்

20. மனைவியா ருடன்மக்கள் மற்றுமுள்ள சுற்றத்தோ
ரனைவரையுங் கொண்டிறைஞ்சி யாராத காதலுடன்
முனைவரையுள் ளெழுந்தருள வித்தவர்தாள்
முன்விளக்கும்
புனைமலர்நீர் தங்கண்மேற் றெளித்துள்ளும் பூரித்தார்.

விருந்தோம்பல்

21. ஆசனத்திற் பூசனைக ளமர்வித்து விருப்பினுடன்
வாசநிறை திருநீற்றுக் காப்பேந்தி மனந்தழைப்பத்
தேசமுய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கு
நேசமுற விண்ணப்பஞ் செயவவரு மதுநேர்ந்தார்.

22. செய்தவ ரிசைந்த போது திருமனை யாரை நோக்கி
யெய்திய பேறு நம்பா லிருந்தவா றென்னே யென்று
மைதிகழ் மிடற்றி னான்ற னருளினால் வந்த தென்றே
யுய்துமென் றுவந்து கொண்டு திருவமு தாக்க லுற்றார்.

23. தூயநற் கறிக ளான வறுவகைச் சுவையா லாக்கி
யாயவின் னமுது மாக்கி யமுதுசெய் தருளத் தங்கள்
சேயவர் தம்மின் மூத்த திருநாவுக் கரசை வாழை
மேயபொற் குருத்துக் கொண்டு வாவென
விரைந்து விட்டார்.

அரவு தீண்டல்

24. நல்லதாய் தந்தை யேவ நானிது செயப்பெற்றேனென்
றெல்லையில் விரைந்து தோட்டத் துள்புக்குப்
பெரிய வாழை
மல்லலங் குருத்தை யீரும் பொழுதினில் வாள
ராவொன்
றல்லலுற் றழுங்கிச் சோர வங்கையிற் றீண்டிற் றன்றே.

25. கையினிற் கவர்ந்து சுற்றிக் கண்ணெரி காந்து கின்ற
பையர வுதறி வீழ்த்துப் பதைப்புடன் பாந்தள் பற்றும்
வெய்யவே கத்தால் வீழா முன்னம்வே கத்தா லெய்திக்
கொய்தவிக் குருத்தைச் சென்று கொடுப்பனென்
றோடி வந்தான்.

26. பொருந்திய விடவே கத்திற் போதுவான் வேக மூந்த
வருந்தியே யணையும் போழ்து மாசுணங் கவர்ந்த
தியார்க்கு
மருந்தவ ரமுது செய்யத் தாழ்க்கயா னறையே யென்று
திருந்திய கருத்தி ஞேடுஞ் செழுமனை சென்று புக்கான்.

27. எரிவிட முறையே யேறத் தலைக்கொண்ட வேழாம்
வேகந்
தெரிவுற வெயிறுங் கண்ணு மேனியுங் கருகித் தீந்து
விரியுரை குழறி யாவி விடக்கொண்டு மயங்கி வீழ்வான்
பரிகலக் குருத்தைத் தாயார் பால்வைத்துப்
படிமேல் வீழ்ந்தான்.

அப்பூதியடிகளின் அரிய மனநிலைப்பும் ஆற்றிய செயலும்

28. தளர்ந்துவீழ் மகனைக் கண்டு தாயருந் தந்தை யாரு
முளம்பதைத் துற்று நோக்கி யுதிரஞ்சோர் வடிவு மேனி
விளங்கிய குறியுங் கண்டு விடத்தினல் வீந்தா னென்று
துளங்குத லின்றித் தொண்ட ரமுதுசெய் வதற்குச்
சூழ்வார்.

29. பெறலரும் புதல்வன் றன்னைப் பாயினுட் பெய்து மூடிப்
புறமனை முன்றிற் பாங்கோர் புடையினின்
மறைத்து வைத்தே
யறவிது தெரியா வண்ண மமுதுசெய் விப்போ மென்று
விறலுடைத் தொண்ட ஞர்பால் விருப்பொடு
விரைந்து வந்தார்.

30. கடிதுவந் தமுது செய்யக் காலந்தாழ்க் கின்றதென்றே
யடிசிலுங் கறியு மெல்லா மழகுற வணைய வைத்துப்
படியில்சீர்த் தொண்ட ஞர்முன் பணிந்தெழுந்
தமுது செய்தெங்
குடிமுழு துய்யக் கொள்வீ ரென்றவர் கூறக் கேட்டு.

31. அருந்தவ ரெழுந்து செல்ல வடியிணை விளக்கி வேறோர்
திருந்துமா சனத்தி லேற்றிப் பரிகலந் திருத்து முன்ன
ரிருந்து வெண்ணீறு சாத்தி யியல்புடை யிருவ ருக்கும்
பொருந்திய நீறு நல்கிப் புதல்வர்க்கு மளிக்கும்
போழ்தில்.

அரசின் வினவும் அடிகளின் மாற்றமும்

32. ஆதிநாள் மறைநூல் வாய்மை யப்பூதி யாரை நோக்கிக்
காதல ரிவர்க்கு மூத்த சேயையுங் காட்டு முன்னே
மேதரு பூதி சாத்த வென்றலும் விளைந்த தன்மை
யாதுமொன் றுரையா ரிப்போ திங்கவ னுதவா னென்றார்.

33. அவ்வுரை கேட்ட போதே யங்கண ரருளா லன்பர்
செவ்விய திருவுள் ளத்தோர் தடுமாற்றஞ் சேர நோக்கி
யிவ்வுரை பொறாதென் னுள்ள மென்செய்தா னிதற்கொன் றுண்டான்
மெய்விரித் துரையு மென்ன விளம்புவார் விதிர்ப்புற் றஞ்சி.

34. பெரியவ ரமுது செய்யும் பேறிது பிழைக்க வென்னோ
வருவதென் றுரையா ரேனு மாதவர் வினவ வாய்மை
தெரிவுற வுரைக்க வேண்டுஞ் சீலத்தாற் சிந்தை நொந்து
பரிவொடு வணங்கி மைந்தர்க் குற்றது பகர்ந்தா ரன்றே.

பதிகம் பாடலும் மூத்த திருநாவுக்கரசு உயிர்பெறலும்

35. நாவினுக் கரசர் கேளா நன்றுநீர் புரிந்த வண்ணம்
யாவரித் தன்மை செய்தா ரென்றுமுன் னெழுந்து சென்றே
யாவிதீர் சவத்தை நோக்கி யண்ணலா ரருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்றுவித்தார்.

36. தீவிட நீங்க வுய்ந்த திருமறை யவர்தஞ் சேயு
மேவிய வுறக்க நீங்கி விரைந்தெழு வானைப் போன்று
சேவுகைத் தவராட் கொண்ட திருநாவுக் கரசர் செய்ய
பூவடி வணங்கக் கண்டு புனிதநீ றளித்தா ரன்றே.

37. பிறிவுறு மாவி பெற்ற பிள்ளையைக் காண்பார் தொண்டி
னெறியினைப் போற்றி வாழ்ந்தார் நின்றவப்
பயந்தார் தாங்க
ளறிவரும் பெருமை யன்ப ரமுதுசெய் தருளு தற்குச்
சிறிதிடை யூறு செய்தா னிவனென்று சிந்தை
நொந்தார்.

38. ஆங்கவர் வாட்டந் தன்னை யறிந்துசொல் லரசர் கூட
வோங்கிய மனையி லெய்தி யமுதுசெய் தருள வுற்ற
பாங்கினி லிருப்ப முந்நூல் பயின்மணி மார்பர் தாமுந்
தாங்கிய மகிழ்ச்சி யோடுந் தகுவன சமைத்துச்
சார்வார்.

39. புகழ்ந்த கோ மயத்தி னீராற் பூமியைப் பொலிய நீவித்
திகழ்ந்தவான் சுதையும் போக்கிச் சிறப்புடைத்
தீப மேற்றி
நிகழ்ந்தவக் கதலி நீண்ட குருத்தினை விரித்து நீரான்
மகிழ்ந்துடன் விளக்கி யீர்வாய் வலம்பெற மன்னு
வித்தார்.

40. திருந்திய வாச நன்னீ ரளித்திடத் திருக்கை நீவும்
பெருந்தவர் மறையோர் தம்மைப் பிள்ளைக
ளுடனே நோக்கி
யரும்புதல் வர்களு நீரு மமுதுசெய் வீரிங் கென்ன
விரும்பிய வுள்ளத் தோடு மேவல ரேவல் செய்வார்.

41. மைந்தரு மறையோர் தாமு மருங்கிருந் தமுது செய்யச்
சிந்தைமிக் கில்ல மாதர் திருவமு தெடுத்து நல்கக்
கொந்தவிழ் கொன்றை வேணிக் கூத்தனு ரடியா ரோடு
மந்தமி ழாளி யாரங் கமுதுசெய் தருளி னரே.

42. மாதவ மறையோர் செல்வ மனையிடை யமுது செய்து
காதனண் பளித்துப் பன்னாள் கலந்துட னிருந்த பின்றை
மேதகு நாவின் மன்னர் விளங்கிய பழன மூதூர்
நாதர்தம் பாதஞ் சேர்ந்து நற்றமிழ்ப் பதிகஞ்
செய்தார்.

அப்பூதியடிகளின் அடிமைத்திறம்

43. அப்பூதி யடிக ளார்த மடிமையைச் சிறப்பித் தான்ற
மெய்ப்பூதி யணிந்தார் தம்மை விரும்புசொன்
மாலே வேய்ந்த
விப்பூதி பெற்ற நல்லோ ரெல்லேயி லன்பா லென்னுஞ்
செப்பூதி யங்கைக் கொண்டார் திருநாவுக் கரசர்
பாதம்.

44. இவ்வகை யரசின் பாத மேத்தியெப் பொருளு நாளு
மவ்வருந் தவர்பொற் ருளே யெனவுணர்ந்
தடைவார் செல்லுஞ்
செவ்விய நெறிய தாகத் திருத்தில்லே மன்று ளாடு
நவ்வியங் கண்ணுள் பங்கர் நற்கழ னண்ணி ஞரே.

45. மான்மறிக் கையர் பொற்ருள் வாகீச ரடைவாற்
பெற்ற
மேன்மையப் பூதி யாராம் வேதியர் பாதம் போற்றிச்
கான்மலர்க் கமல வாவிக் கழனிசூழ் சாத்த மங்கை
நான்மறை நீல நக்கர் திருத்தொழி னவில லுற்றேன்.

5. கம்ப ராமாயணம்

கம்ப ராமாயணம்—கம்பரது ராமாயணம் என விரியும், கம்பர் செய்த ராமாயணம் என்பது பொருளாகும். ராம + அயநம் = ராமாயணம். கம்பர் + ராமாயணம் = கம்பராமாயணம். 'ராம' என்னும் சொல்லுக்குத் தன் திருமேனியழகினாலும், நற்குண நற்செய்கைகளாலும் யாவரையும் மகிழ்விப்பவன் என்பது பொருள். வடமொழியில் ஆதி காவியமாகிய வான்மீகி ராமாயணக் கதையைத்தழுவிக் கம்பர் தமிழில் ராமாயணம் செய்தார். மூலக் கதையை அப்படியே ஏறறுக்கொள்ளாமல், காப்பியத்தின் பலவிடங் களிலும் மாற்றித் தமிழ் மரபிற்கேற்ற முறையில் கம்பர் தம் ராமாயணத்தை இயற்றியுள்ளார். 'சீதா'வைச் சீதையென்றும், 'ராமனை' இராமனென்றும், 'இலட்சுமணனை' இலக்குவன் என்றும் 'கௌசல்யை'யை கோசலை யென்றும் அமைத்ததோடல்லாமல் 'ரத்தாட்சனை'க் குருதிக்கண்ணன் என்றும், 'யக்ஞ விரோதியை' வேள்விப்பகைஞன் என்றும் அமைத்துள்ள கம்பர் மொழிப்பற்று பெரிதும் போற்றத் தகுவதாகும். 'என்றுமுள தென்றமிழ்' என்று கூறித் தம் தமிழ்ப்பற்றையும், 'காவிரி நாடன்ன கழனி நாடு' என்று கூறித் தம் நாட்டுப் பற்றையும் காட்டிக்கொள்ளும் கம்பர், சீதையும் இராமனும் திருமணத்திற்கு முன்னரே ஒருவரை யொருவர் கண்டு காதல் கொண்டனர் என்று கூறிய நிலையில் தமிழ் மரபினையும் விடாது போற்றுபவர் என்பதனை நன்கு புலப்படுத்தியுள்ளார். ஐந்திணை விளக்கமும் அகப்பொருளமைதிகளும் கொண்டிலங்கும் இந் நூல் 'மொழிபெயர்ப்பு நூலையும், மூல நூல் போல் ஆக்கலாம்' என்றும் கருத்திற்குச் சான்றாய் ஒளிர்வதாகும்.

கட்டுக்கோப்புடன் மாறுபாடின்றி நினைவோடு நடாத்தும் கதைப் போக்கும், கதையுறுப்பினர்களை நம் உள்ளத்துடன் உறவாட வைக்கும் பாத்திரப் படைப்பும், இடத்துக் கேற்ற சந்தமும் உணர்ச்சிக் கேற்ற நடையும் காட்டும் கவிதைச் சிறப்பும் அமைந்த இக்காப்பியம் சொல்ல வருவன வற்றைக் கண்முன் படைத்துக் காட்டும் சிறப்புடைமையால் 'கம்ப சித்திரம்' என்றும், தொடர்ந்துவரும் காட்சிகளை

நேரில் காண்பதுபோல் நடத்திச் செல்வதால் 'கம்பநாடகம்' என்றும் போற்றிப் புகழப்படுகின்றது.

இராம காதை பழங்காலத்திலேயே நாடு முழுவதும் நன்கறிந்திருந்த கதையென்பது சங்க இலக்கியங்களில் காணப்படும் சில பாடல்கள் கொண்டே அறியலாம். மேலும்,

"தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வற் பயந்தோன் என்பது
நீயறிந் திலையோ நெடுமொழி யன்றோ ?"

எனவரும் சிலப்பதிகார ஊர்காண்காதைப் பகுதியில் இராம காதையின் பழக்க மிகுதியினை அறியலாம்.

கம்பர் சோழ நாட்டில் திருவழுந்தூரில் உவச்சர் குலத்தில் ஆதித்தன் என்பவருக்கு மகனாகப் பிறந்தார் என்பர். திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்ற இவர் தாம் பாடிய இராமாயணத்தில் பத்து இடங்களில் அவ்வள்ளலை நன்றிப் பெருக்குடன் போற்றிப் புகழ்ந்துள்ளார். 'கல்வியிற் பெரியர் கம்பர்' என்றும், 'கவிச் சக்கரவர்த்தி கம்பர்' என்றும் கம்பர் ஒருமுகமாகப் பாராட்டப் பெறுகின்றார். 'கம்பநாடன் கவிதையிற்போற் கற்றோர்க்கு இதயம் களியாதே' என்றபடி இவர்தம் பாக்கள் கவிதைக்குரிய சிறப்புக்கள் அனைத்தும் பெற்றுத் துலங்கக் காணலாம். இவர் வாழ்ந்த காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு என்றும், கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு என்றும் இருவகையாகக் கூறுவர். ஆயினும் அறிஞர் பலர் இவரைக் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்று துணிகின்றனர். இவர் இயற்றிய வேறு நூல்கள் — சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, திருக்கை வழக்கம், சரசுவதியந்தாதி முதலியனவாகும்.

ஈண்டுப் பாடப் பகுதியாக வைக்கப் பெற்றுள்ள 'பரசுராமப் படலம்' சீதையை மணந்து அயோத்தி மீளும் இராமனோடு பரசுராமன் போரிட்டுத் தோற்றுத் தன் தவத்தினையே இராமனுக்குக் காணிக்கையாக்கிச் செல்லும் பகுதியினைக் கூறுவதாகும்.

பரசுராமப் படலம்

விசுவாமித்திரன் தவஞ்செய்யச் செல்லுதல்

1. தாளுவதொர் வகையேநனி சனகன்றரு தையலுந்
நாளுவித முறுபோகமு நுகர்கின்றவந் நாள்வாய்
ஆளுமறை நெறியாசிகள் முனிகோசிகன் அருளிப்
போனான்வட திசைவாயுயர் பொன்மால்வரை புக்கான்.

தசரதன் அயோத்தி மீளுதல்

2. அப்போதினின் முடிமன்னவன் அணிமாநகர் செலவே
இப்போதுநம் அனிகந்துணை யெழுகென்றினி திசையாக்
கைப்போதக நிகர்காவலர் குழுவந்தடி கதுவ
வொப்போதரு தேர்மீதினில் இனிதேறினன் உரவோன்

3. தன்மக்களு மருமக்களு நனிதன்கழ றழுவ
மன்மக்களு மயன்மக்களும் வயின்மொய்த்திட மிதிலைத்
தொன்மக்களு மனமுக்குயிர் பிரிவென்பதொர் துயரின்
வன்மைக்கடல் புகவுய்ப்பதொர் வழிபுக்கனன்
மறவோன்.

4. முன்னேநெடு முடிமன்னவன் முறையிற்செல மிதிலை
நன்மாநக ருறைவார்மன நனிபின்செல நடுவே,
தன்னேர்புரை தருதம்பியர் தழுவிச்செல மழைவாழ்
மின்னேபுரை யிடையாளொடும் இனிதேகினன் வீரன்.

5. ஏகும்மள வையின்வந்தன வலமும்மயி லிடமுங்
காகம்முத லியமுந்திய தடைசெய்வன கண்டான்
நாகம்மன னிடையிங்குள திடையூறென நடவான்
மாகம்மணி யணிதேரொடு நின்றானெறி வந்தான்.

6. நின்றேநெறி யுணர்வானொரு நிலைவாளனை யழையா
நன்றோபழு துளதோநடு வுரைநீநய மென்னக்
குன்றேபுரை தோளானெதிர் புள்ளின்குறி கொள்வான்
இன்றேவரும் இடையூறது நன்றாய்விடு மென்றான்.

பரசுராமன் வருகை

7. என்னும்மள வினில்வானக மிருள்கீறிட வொளியாய்
மின்னும்படி புடைவீசிய சடையான்மழு வுடையான்
பொன்னின்மலே வருகின்றது போல்வானனல்கால்வான்
உன்னுந்தழல் விழியானுரு மதிர்கின்றதொ ருரையான்.

8. கம்பித்தலே யெறிநீருறு கலமொத்துல குலேயத்
தம்பித்துயர் திசையானேகள் தளரக்கடல் சலியா
வெம்பித்திரி தரவானவர் வெருவுற்றிரி தரவோர்
செம்பொற்சிலே தெறியாவயின் முகவாளிகள் தெரிவான்

9. விண்கீழுற வென்றேபடி மேல்கீழுற வென்றே
வெண்கீறிய வுயிர்யாவையும் யமன்வாயிட வென்றே
புண்கீறிய குருதிப்புனல் பொழிகின்றன புரையக்
கண்கீறிய கனலான்முனி வியாதென்றயல் கருத.

10. போரின்மிசை யெழுகின்றதொர் மழுவின்சிகை புகையத்
தேரின்மிசை மலேசூழ்வரு கதிருந்திசை திரிய
நீரின்மிசை வடவைக்கனல் நெடுவானுற முடுகிப்
பாரின்மிசை வருகின்றதொர் படிவெஞ்சுடர் படர

11. பாழிப்புய முயர்த்திக்கிடை யடையப்புடை படருஞ்
சூழிச்சடை முடிவிண்டொட வயல்வெண்மதி தோற்ற
வாழிப்புன லெரிகானில மாகாயமு மழியும்
ஊழிக்கடை முடிவிற்றிரி யுமைகேள்வனே யொப்ப

12. அயிர்சுற்றிய கடன்மாநில மடையத்தனிப் படருஞ்
செயிர்சுற்றிய படையானடன் மறமன்னவர் திலதன்
உயிருற்றதொர் மரமாமென வோராயிர முயர்தோள்
வயிரப்பணே துணியத்தொடு வடிவாய்மழுவுடையான்.

13. நிருபர்க்கொரு பழிபற்றிட நிலமன்னவர் குலமுங்
கருவற்றிட மழுவாள்கொடு களேகட்டுயிர் கவரா
இருபத்தொரு படிகாலெழு கடலொத்தலே யெறியுங்
குருதிப்புன லதனிற்புக முழுகித்தனிக் குடையான்.

14. கமையொப்பதொர் தவமுஞ்சுடு கனலொப்ப
தொர் சினமுஞ்
சமையப்பெரி துடையானெதிர் தளர்வுற்றிடை
தவிரும்
அமையத்துயர் பறவைக்கினி தாரும்வகை சீருச்
சிமயக்கிரி யுருவத்தனி வடிவாளிகள் தெரிவான்.

15. சையம்புக நிமிரக்கடல் தழுவும்படி சமைவான்
மையின்னுயிர் மலைநூறிய மழுவாளவன் வந்தான்
ஐயன்றனை யரிதிற்றரு மரசன்னது கண்டான்
வெய்யன்வர நிபமென்னைகொல் எனவெய்துறு
மெல்லை.

16. பொங்கும்படை யிரியக்கிளர் புருவங்கடை நெரிய
வெங்கண்பொறி சிதறக்கடி துருமேறென விடையாச்
சிங்கம்மென யுயர்தேர்வரு குமரன்னெதிர் சென்றான்
அங்கண்ணர சவனும்மிவன் ஆரோவெனும் அளவில்.

பரசுராமன் இராமன் எதிரில் பேசுதல்

17. அரசன்னவ னிடைவந்தினி தாராதனை புரிவான்
விரைசெய்முடி படிமேலுற வடிமேலுற விழலுங்
கரைசென்றில னனையானெடு முடிவின்கனல்
கால்வான்
முரசின்குரல் படவீரன தெதிர்நின்றிவைமொழிவான்.

18. இற்றோடிய சிலையின்றிற மறிவென்னினி யானுன்
பொற்றோள்வலி நிலைசோதனை புரிவானசை
யுடையேன்
செற்றோடிய திரடோளுறு தினவுஞ்சிறி துடையேன்
மற்றோர்பொரு ளிலதிங்கிதென் வரவென்றனன்
உரவோன்.

தசரதன் வேண்டுதல்

19. அவனன்னது பகரும்மள வையின்மன்னவன் அயர்வான்
புவனம்முழு வதும்வென்றொரு முனிவற்கருள் புரிவாய்
சிவனும்மய னரியும்மலர் சிறுமானிடர் பொருளோ
இவனும்மென துயிரும்முன தபயம்மினி யென்றான்.

20. விளிவார்விளி வதுதீவினை விழைவாருழை யன்றோ
களியாலிவன் அயர்கின்றன வுளவோகனல் உமிழும்
ஒளிவாய்மழு வுடையாய்பொர வுரியாரிடை யல்லால்
எளியாரிடை வலியார்வலி யென்னாகுவ தென்றான்.

21. நனிமாதவ முடையாயிது பிடிநீயென நல்குந்
தனிநாயக முலகேழையு முடையாயிது தவிராய்
பனிவார்கடல் புடைசூழ்படி நரபாலரை யருளா
முனிவாறினை முனிகின்றது முறையோவென
மொழிவான்.

22. புறனின்றவர் இகழும்படி நடுவின்றலை புணராத்
திறனின்றுயர் வலியென்னதொ ரறனின்றரு செயலோ
அறனின்றத னிலைநின்றுயர் புகழொன்றுவ தன்றோ
மறனென்பது மறவோயிது வலியென்பது வலியோ.

23. சலத்தோடியை விலனென்மகன் அனையானுயிர்
தபுமேல்
உலத்தோடெதிர் தோளாயென துறவோடுயிர்
உகுவேன்
நிலத்தோடுயர் கதிவானுற நெடியாயுன தடியேன்
குலத்தோடற முடியேலிது குறைகொண்டனெ
னென்றான்.

24. என்னாவடி விழுவானையும் இகழாவெரி விழியாப்
பொன்னார்கலை யணிவானெதிர் புகுவானிலை யுணராத்
தன்னாலொரு செயலின்மையை நினையாவுயிர் தளரா
மின்னாலயர் வுறும்வாளர வெனவெய்துற லுற்றான்.

பரசுராமன் உரை

25. மானம்முடை முடிமன்னவன் மதிசோர்வுறன்மதியான்
தானந்நிலை யுறுவானுறு வினையுண்டது தவிரான்
ஆனம்முடை யுமையண்ணலை யந்நாளுறு சிலைதான்
ஊனம்முள ததன்மேனிலை கேணீயென வுரைப்பான்.

26. ஒருகால்வரு கதிராமென வொளிகால்வன வுலையா
வருகார்தவழ் வடமேருவின் வலிசெல்வன வையம்
அருகாவினை புரிவானுளன் அவனுலமை வனதாம்
இருகார்முகம் உளயாவையு மேலாதன மேனுள்.

27. ஒன்றினை யுமையாள் கேள்வ னுவந்தனன்
மற்றை யொன்றை
நின்றுல களந்த நேமி நெடியவ னங்கை கொண்டான்
என்றிது வுணர்ந்த விண்ணோர் இரண்டினும்
வன்மை யெய்தும்
வென்றிய தியாவ தென்று விரிஞ்சனை வினவ வந்நாள்.

28. சீரிது தேவர் தங்கள் சிந்தனை யென்ப துன்னி
வேரியங் கமலத் தோனும் விளைவதோர்
வினையந் தன்னால்
யாரினு முயர்ந்த மூலத் தொருவராம் இருவர்தம்மை
மூரிவெஞ் சிலைமே லிட்டு மொய்யமர் மூட்டிவிட்டான்.

29. இருவரும் இரண்டு வில்லும் ஏற்றினர் உலகம் ஏழும்
வெருவரத் திசைகள் பேர வெங்கனல் பொங்க
மேன்மேற்
செருமலை கின்ற போழ்திற் றிரிபுர மெரித்த தேவன்
வரிசிலை யிற்ற தாக மற்றவன் முனிந்து மன்னோ.

30. மீட்டும்போர் தொடங்கும் வேலை விண்ணவர்
விலக்க வல்வில்
நீட்டினன் தேவர் கோன்கை நெற்றியிற்
கண்ணன் வெற்றி
காட்டிய கரிய மாலுங் கார்முக மதனைப் பாரி
வீட்டிய தவத்தின் மிக்க விரிசிகற் கீந்து போனன்.

31. இரிசிகன் எந்தைக் கீய வெந்தையும் எனக்குத் தந்த
வரிசிலே யிதுநீ நொய்தின் வாங்குதி யாயின் மைந்த
குரிசில்க ணின்னே டொப்பா ரில்லையான் குறித்த போரும்
புரிகிலெ னின்னே டின்னம் புகல்வது கேட்டி யென்றான்.

32. ஊனவில் லிறுத்த மொய்ம்பை நோக்குவ தூக்க மன்றால்
மானவ மற்றுங் கேளாய் வழிப்பகை யுடையன் நும்பால்
ஈனமி லெந்தை சீற்ற நீக்கின னென்ன முன்னோர்
தானவ னனைய மன்னன் கொல்லயான் சலித்து மன்னே.

33. மூவெழு முறைமை பாரின் முடியுடை வேந்தை யெல்லா
மேவெழு மழுவின் வாயால் வேரறக் களைகட் டன்னர்
தூவெழு குருதி வெள்ளத் துறையிடை முறையி னெந்தைக்
காவன கடன்கள் நேர்ந்தே னருஞ்சின மடக்கிப் போந்தேன்.

34. உலகெலா முனிவற் கீந்தேன் உறுபகை யொடுக்கிப் போந்தேன்
அலகின்மா தவங்கள் செய்தோ ரருவரை யிருந்தே னுண்டைச்
சிலையைநீ யிறுத்த வோசை செவியுறச் சிறி வந்தேன்
மலைகுவென் வல்லை யாயின் வாங்குதி தனுவை யென்றான்.

இராமனும் சிவதனுசும்

35. என்றன னென்ன நின்ற விராமனு முறுவ லெய்தி
நன்றருளிர் முகத்த ஞகி நாரணன் வலியி னுண்ட
வென்றவிற் றருக வென்னக் கொடுத்தனன் வீரன் கொண்டான்
துன்றிருஞ் சடையோன் அஞ்சத் தோளுற வாங்கிச் சொல்லும்.

36. பூதலத் தரசை யெல்லாம் பொன்றுவித் தனையென் ருலும்
வேதவித் தாய மேலோன் மைந்தனீ விரதம் பூண்டாய்
ஆதலிற் கொல்ல லாகா தம்பிது பிழைப்ப தன்ருல்
யாதிதற் கிலக்க மாவ தியம்புதி விரைவி னென்ருன்.

37. நீதியாய் முனிந்திட னீயிங் கியாவர்க்கும்
ஆதியா னறிந்தனெ னலங்க னேமியாய்
வேதியா விறுவதே யன்றி வெண்மதிப்
பாதியான் பிடித்தவில் பற்றப் போதுமோ.

38. பொன்னுடை வனைகழற் பொலங்கொ டாளினய்
மின்னுடை நேமியா ஞதன் மெய்ம்மையால்
என்னுள துலகினுக் கிடுக்கண் யான்றந்த
வுன்னுடை வில்லுமுன் னுரத்துக் கீடன்ருல்.

39. எய்தவம் பிடைபழு தெய்தி டாமலென்
செய்தவ மியாவையுஞ் சிதைக்க வேயெனக்
கையவ னெகிழ்தலுங் கணையுஞ் சென்றவன்
மையறு தவமெலாம் வாரி மீண்டதே.

40. எண்ணிய பொருளெலா மினிது முற்றுக
பண்ணிய மணிநிற வண்ண வண்டுழாய்க்
கண்ணிய யாவர்க்குங் களைக ணுகிய
புண்ணிய விடையெனத் தொழுது போயினன்.

தசரதன் மகிழ்ச்சி

41. அழிந்தவன் போனபின் அமல னையுணர்
வொழிந்துதன் னுயிருலைந் துருகு தாதையைப்
பொழிந்தபே ரன்பினூற் றெழுது முன்புபுக்
கிழிந்தவான் றுயர்க்கடற் கரைநின் றேற்றினன்.

42. வெளிப்படு முணர்வினன் விழும நீங்கியே
தளிர்ப்புறு மதகரித் தானை யானிடைக்
குளிப்பருந் துயர்க்கடற் கோடு கண்டவன்
களிப்பெனுங் கரையிலாக் கடலு ளாழ்ந்தனன்.

43. பரிவறு சிந்தையப் பரசு ராமன்கை
வரிசிலை வாங்கியோர் வசையை நல்கிய
வொருவனைத் தழுவிநின் றுச்சி மோந்துதன்
அருவியங் கண்ணெனுங் கலச மாட்டினன்.

44. பொய்ம்மையில் சிறுமையிற் புரிந்த ஆண்தொழில்
மும்மையின் உலகினல் முடிக்க லாவதோ
மெய்ம்மையிச் சிறுவனே வினைசெய் தோர்களுக்
கிம்மையு மறுமையு மீயு மென்றனன்.

இராமன் அயோத்தி சேர்தல்

45. பூமழை பொழிந்தனர் புகுந்த தேவருள்
வாமவேல் வருணனை மான வெஞ்சிலை
சேமியென் றுதவித்தன் சேனை யார்த்தெழ
நாமநீர் அயோத்திமா நகரம் நண்ணினன்.

பரதன் பாட்டன்வீடு செல்லல்

46. நண்ணினர் இன்பத்து வைகு நாளிடை
மண்ணுறு முரசினம் வயங்கு தானையான்
அண்ணலப் பரதனை நோக்கி யாண்டகை
யெண்ணருந் தகையதோர் பொருளி யம்புவான்.

47. ஆணைநின் றன்முது தாதை யையநிற்
காணிய விழைவதோர் கருத்த னாதலாற்
கேணியில் வளைமுரல் கேக யம்புகப்
பூணொளிர் மார்பநீ போதி யென்றனன்.

48. ஏவலும் இறைஞ்சிப்போ யிராமன் சேவடிப்
பூவினைச் சென்னியிற் புனைந்து போயினான்
ஆவியங் கவனல தில்லை யாதலால்
ஓவலில் உயிர்பிரிந் துடல்சென் றென்னவே.

49. உளைவிரி புரவித்தேர் உதாசித் தென்றெனும்
வளைமுரல் தானையான் மருங்கு போதப்போய்
இளையவன் தன்னொடும் ஏழு நாளிடை
நளிர்புனற் கேகய நாடு நண்ணினான்.

50. ஆனவன் போனபின் அரசர் கோமகன்
ஊனமில் பேரர சுய்க்கு நாளிடை
வானவர் செய்தமா தவமுண் டாதலான்
மேனனி நிகழ்ந்தன விளம்பு வாமரோ.

6. கலிங்கத்துப் பரணி

பரணி என்னும் நூல்வகை தமிழ்மொழியிலுள்ள தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று.

> ''ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
> மானவ னுக்கு வகுப்பது பரணி''

என்றபடி இந் நூல்வகை போரில் ஆயிரம் யானைகளை வென்ற வீரத் தலைவனைச் சிறப்பித்துப் பாடுவதாகும். போர்க்களத்தில் பேய்கள் பரணி நாளில் கூழ் சமைத்துத் தேவியை வழிபட்டு உண்டு மகிழ்தலால், இந் நூலுக்குப் பரணி என்னும் பெயர் வந்தது என அறிஞர் கூறுவர்.

கலிங்கம் என்பது இன்றைய ஒரிசாவின் தென்பகுதி யாகும். ஆந்திர வடஎல்லையில், கோதாவரி, மகாநதி ஆகிய ஆறுகட்கு இடையே அமைந்த நிலப்பரப்பென்பர். முதற் குலோத்துங்க சோழனுடைய படைத்தலைவன் கருணா கரத் தொண்டைமான் 'இரை வேட்ட பெரும் புலிபோல்' கலிங்கம் சென்று பகைவரைத் தாக்கி வெற்றி பெற்றான். அவன் அடைந்த வெற்றியைச் சோழ வேந்தன் அடைந்த தாகவே வைத்து இந்நூல் பாராட்டுகிறது.

இந்நூலைப் பாடிய பெரும் புலவர் சயங்கொண்டார் ஆவார். இவர் பிறந்த ஊர், சோழநாட்டைச் சேர்ந்த தீபங்குடி. காலம் கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டின் பிற் பகுதியாகும். 'பரணிக்கோர் சயங்கொண்டான்' என இவர் பாராட்டப் பெற்றுள்ளார்.

இந் நூல், கடவுள் வாழ்த்து முதல் களம் பாடியது ஈறாகப் பதின்மூன்று பகுதிகளை உடையது. அவற்றுள் போர் பாடியது என்பதில் ஒரு பகுதி இங்குப் பாடமாக வந்துள்ளது. இது கருணாகரன் படையும் கலிங்கப் படை யும் பொருத போர் பற்றிய வருணனையாகும். இப் பகுதியில் வரும் செய்யுள்களின் நடை போர்க்கள ஆர வாரத்திற்கு ஏற்ற மிடுக்கும் படபடப்பும் அமைந்த நடை யாகும். உணர்ச்சிக்கு ஏற்ப நடை அமைக்கும் புலமைத் திறன் இங்குப் போற்றத் தக்கதாகும்.

போர் பாடியது

போர்

1. எடுமெடு மெடுமென வெடுத்ததோ
 ரிகலொலி கடலொலி யிகக்கவே
விடுவிடு விடுபரி கரிக்குழாம்
 விடும்விடு மெனுமொலி மிகைக்கவே.

2. வெருவர வரிசிலை தெறித்தநாண்
 விசைபடு திசைமுகம் வெடிக்கவே
செருவிடை யிளையவர் தெழித்ததோர்
 தெழியுல குகள்செவி டெடுக்கவே.

3. எறிகட லொடுகடல் கிடைத்தபோ
 லிருபடை களுமெதிர் கிடைக்கவே
மறிதிரை யொடுதிரை மலைத்தபோல்
 வருபரி யொடுபரி மலைக்கவே.

4. கனவரை யொடுவரை முனைத்தபோற்
 கடகரி யொடுகரி முனைக்கவே
யினமுகி லொடுமுகி லெதிர்த்தபோ
 லிரதமு மிரதமு மெதிர்க்கவே.

5. பொருபுலி புலியொடு சிலைத்தபோற்
 பொருபட ரொடுபடர் சிலைக்கவே
யரியினே டரியின மடர்ப்பபோ
 லரசரு மரசரு மடர்க்கவே.

6. விளைகனல் விழிகளின் முளைக்கவே
 மினலொளி கனலிடை பிறக்கவே
விளைசிலை யுருமென விடிக்கவே
 வடிகணை நெடுமழை சிறக்கவே.

7. குருதியி னதிவெளி பரக்கவே
குடர்நிரை நுரையென மிதக்கவே
கரிதுணி படுமுட லடுக்கியே
கரையென விருபுடை கிடக்கவே.

8. மருப்பொடு மருப்பெதிர் பொருப்பிவை யெனப்பொரு
மதக்கரி மருப்பி னிடையே
நெருப்பொடு நெருப்பெதிர் சுடர்ப்பொறி தெறித்தெழு
நிழற்கொடி தழற்க துவவே.

9. முடுகிய பவன் பதத்தி னுகக்கடை
முடிவினி லுலக முணச்சுடர் விட்டெழு
கடுகிய வடவன லத்தினை வைத்தது
களமுறு துரக கணத்தின் முகத்திலே.

10. அலைபடை நிரைக ணிரைத்த செருக்கள
மழல்புரி களமென வொப்பில் விற்படை
தலைபொர வெரிய நெருப்பினின் மற்றது
தழல்படு கழைவன மொக்கினு மொக்குமே.

11. தழல்படு கழைவன மெப்படி யப்படி
சடசட தமர மெழப்பக ழிப்படை
யழல்படு புகைபொழி யப்பொழி யச்சில
ரடுசிலை யகழி தொடுத்து வலிப்பரே.

12. அடியொடு முடிக டுணித்து விழப்பகு
மளவரி தொடையக லத்தொ டணைத்தனர்
நெடியன சிலசர மப்படி பெற்றவர்
நிறைசர நிமிர விடத்துணி யுற்றவே.

13. நிறைசர நிமிர விடத்துணி யுற்றவர்
நெறியினை யொடியெறி கிற்பவ ரொத்தெதி
ரறைகழல் விருதர் செருக்கற வெட்டலி
னவருட லிருவகிர் பட்டன முட்டவே.

14. அமர்புரி தமதக லத்தி டைக்கவி
ழுடுகரி நுதலி லடிப்ப ரிக்களி
றெமதென விருகண் விழிக்க வுட்கின
ரெனவிடு கிலர்படை ஞர்க்கு வெட்கியே.

15. அலகில் செருமுதிர் போதில் வண்டைய
ரரச ரைசர்க ளுதன் மந்திரி
யுலகு புகழ்கரு ணுக ரன்றன
தொருகை யிருபணை வேழ முந்தவே.

16. ஒருவ ரொருவரி னோட முந்தின
ருடலி னிழலினை யோட வஞ்சின
ரருவ ரருவ ரெனுவி றைஞ்சின
ரபய மபய மெனுந டுங்கியே.

17. வரைக்கலிங்கந் தமைச்சேர மாசை யேற்றி
வன்றூறு பறித்துமயிர்க் குறையும் வாங்கி
யரைக்கலிங்க முரிப்புண்ட கலிங்க ரெல்லா
மமணரெனப் பிழைத்தாரு மநேக ராங்கே.

18. வேடத்தாற் குறையாது முந்நூ லாக
வெஞ்சிலைநாண் மடித்திட்டு விதியாற் கங்கை
யாடப்போந் தகப்பட்டோங் காத்தோம் பென்றெண்
றபிதாவிட் டுயிர்பிழைத்தா ரநேக ராங்கே.

19. குறியாகக் குருதிநீர்க் கோடி யாடை
கொண்டுடுத்துப் போர்த்துத்தங் குஞ்சி முண்டித்
தறியீரோ சாக்கியரை யுடைகண் டாலென்
றப்பிரமண் ணியமிடுவா ரநேக ராங்கே.

20. சேனைமடி களங்கண்டு திகைத்து நின்றேந்
தெலுங்கரே மென்றுசிலைக் கலிங்கர் தங்க
ளானைமணி யினைத்தாளம் பிடித்துப் பாடி
யாடிப்பாண ரெனப்பிழைத்தா ரநேக ராங்கே.

21. இவர்கண்மே லினியொருவர் பிழைத்தா ரில்லை
யெழுகலிங்கத் தோவியர்க ளெழுதி வைத்த
சுவர்கண்மே லுடலன்றி யுடல்க ளெல்லாந்
தொட்டீர்த்துப் பிடித்தறுத்தார் சூர ராங்கே.

22. கடற்கலிங்க மெறிந்துசயத் தம்ப நாட்டிக்
கடகரியும் வயமாவுந் தனமுங் கொண்டு
சுடர்க்கதிர்வா ளபயனடி யருளி னோடுஞ்
சூடினான் வண்டையர்கோன் றொண்டைமானே.

7. வில்லிபுத்தூரார் பாரதம்

பாரதம் என்பது பரதனின் வழிவந்தவர்களுடைய வரலாற்றைக் கூறும் நூல் என்பர். பரதன் வழித்தோன்றல் களே பாண்டவரும் துரியோதனுதியரும் ஆவர்.

இந்நூலை **வில்லிபுத்தூரார்** வடமொழி வியாச பாரதத்தி னின்று மொழிபெயர்த்துத் தமிழில் இயற்றினுர். ஆயினும் இவர், வடநூற் கதையை மட்டும் எடுத்துக்கொண்டு அதில் கொள்ளுவன கொண்டும் தள்ளுவன தள்ளியும் சுவைபட இயற்றினுர் எனலாம். வில்லிபாரதம் 4440 பாக் களைக் கொண்டது.

வில்லிபுத்தூரார் திருமுனைப்பாடி என்னும் நடுநாட்டில் சனியூரிற் பிறந்தவர். சந்தஇன்பம் அமைந்த பாடல்கள் இயற்றுவதில் புலமை நலம் சான்ற பெரியார். இவரது மாட்சி உணர்ந்த நடுநாட்டு வக்கபாகை அரசன் வரபதி யாட்கொண்டான் என்பவன், இவரைத் தன் அவைக் களைத்துப் பாரதத்தைத் தமிழில் பாடுமாறு வேண்ட, இவர் அவ்வாறே பாடினுர் என்பதை இந்நூல் பாயிரச் செய்யுளால் அறியலாம். இவரது காலம் 500 ஆண்டு கட்கு முற்பட்டது எனக் கருதப்படுகிறது.

பாடப் பகுதியாகிய உலூகன் தூது சருக்கம், வில்லி புத்தூரார் பாரதத்தின் ஐந்தாவது பருவமாகிய உத்தி யோக பருவத்தில் உள்ளது. பாண்டவர்கள் வனவாச மும் கரந்துறைதலும் முடிந்தபிறகு, மீண்டும் தம் அர சுரிமையைப் பெறுவதற்குச் செய்யும் முயற்சி பற்றிய பரு வம் இது. கண்ண பெருமானின் அறிவுரையும் மற்றவர் களின் நல்லுரையும் கேட்டு, துரியோதனனிடம் தூது அனுப்பிக் கேட்டுவரல் நல்லது என்று முடிவு செய்து, அதன்படி உலூக முனிவரை அத்தினுபுரிக்குத் தூது அனுப்புதலும், அவர் தூது சென்று வருதலும் இங்குக் கூறப்படுகின்றன.

உலூகன் தூது சருக்கம்

1. வல்லி னுலவன் கொண்டமண் மீளவும்
வல்லினுற் கொளலன்றி
வில்லி னுலமர் மலைந்துகொள் ளுதுமெனல்
வேத்துநீ தியதன்ருற்
சொல்லி னுலொரு தூதினி லறியலாஞ்
சுயோதன னிணைவென்று
கல்லி னுல்வரு கன்முகில் விலக்கிய
கரியமா முகில்சொன்னுன்.

2. உரிய வம்புவி யுதிட்டிரன் றனையவ
னுற்றவர் பலர்காணப்
பரிய வன்பெருஞ் சூதினுல் வென்றுபல்
லாண்டடிப் படவாண்டான்
றிரிய வன்புடன் வாங்குதற் கெண்ணுமித்
தீமதி கொடிதென்று
கரிய வன்புகல் கட்டுரை கேட்டபின்
காமபா லனுஞ்சொன்னுன்.

3. இளைய சாத்தகி தமையனை மிகக்கரி
திதயமா யினுநாவில்
விளையு மாற்றநின் றிருவடி வினுமிக
வெள்ளையா கியதென்ன
வுளைய வார்த்தைக ளுரைத்தன னுரைத்தலு
முற்றவ ரிடுக்கண்கள்
களையு மாப்புய லிருவரு மொழிமினுங்
கட்டுரை யினியென்ருன்.

4. பேரு லூகமும் பிணையுநல் கியபெரும்
பிறப்புடைப் பரித்திண்டேர்க்
காரு லூகல நிகரடிக் களிறுடைக்
கண்ணிலா வரசன்பாற்
சீரு லூகனைத் தூதுசென் றிவர்மனஞ்
செப்பிமீள் கெனப்போக்கி
யோரு லூகல முடன்றவழ்ந் தவன்றன
தூர்புகுந் தனனன்றே.

5. இந்த வந்தண னீயிசைத் தனவெலா
மியல்புட னினிதாக
வந்த வந்தனே டுரைத்தபி னவனின
தவனிதந் திலனுகின்
முந்த வந்தண்மா முரசகே தனதிரு
முகம்வர விடுகென்று
வந்த வந்துமன் னவர்களுந் தத்தமா
நகரடைந் தனர்மன்னே;

6. அரசர் போனபின் மால்பணி தவறுரு
தம்முனி தனைநோக்கி
முரச கேதன னீயெழுந் தருள்கென
முனிவனைத் தொழுதேத்தி
விரைசெய் தார்புனை வீடும னெந்தைமெய்
விதுரன்வே தியர்கோவைப்
பரசி னேமடி யென்றுபின் னுரியசொற்
பணித்தரு ளெனப்போந்தான்.

7. போன நான்மறைப் புரோகித னத்தினு
புரிபுகுந் தெரிபைம்பொன்
மான வார்கழற் றிருதராட் டிரனெனு
மன்னவை தனிலெய்த
ஞான மாமுனி வரவுகண் டெதிர்கொளா
நயந்திரு பதம்போற்றி
யான மாமணி யாசனத் திருத்தினு
னரவவெங் கொடியோனே.

8. விந்த மன்னதோள் வீடுமன் முதலியோர்
விழைவுடன் றெருடுதேத்தி
வந்த வாறுரைத் தருள்கென வறன்மகன்
வந்தனை முதற்கூறி
யந்த ணுகிய கந்தடர் கடகளிற்
றரசனு மவன்றந்த
மைந்தர் யாவருங் கன்னனுஞ் சகுனியு
மனங்கனன் றிடச்சொல்வான்.

9. ஆண்டு பன்னிரண் டடவியுற் றெருவரு
 மறிவுரு வகைமற்றோ
ராண்டு மன்னிய பாண்டுவின் மதலைய
 னைவரும் வெளிப்பட்டா
ராண்டு மன்னர்முன் சூதுபார் பொருதழிந்
 தளித்திடு தலினீர்கொண்
டாண்டு வந்தபார் நும்மொழிப் படியவர்க்
 களித்திரோ வளியீரோ.

10. முன்ன ரும்பொரு துளதுநீர் சூதுபோர்
 மோதுபோர் கருதாம
லின்ன மும்பொர வேண்டுமேற் பொருதிடு
 மிலஞ்சியிற் பொலஞ்செங்கா
லன்ன முங்கிரி மயில்களு முடன்விளை
 யாடுநல் வளநாட்டீர்
பின்ன மும்பிற வாதினிப் பண்டுபோற்
 பீடுறும் பெருவாழ்வும்.

11. அன்றி யேபவ ருடன்மலை குவமென
 பழிவினைக் கருதாமல்
வென்றி யேறினைந் தெதிர்த்திரே லுங்களால்
 வெல்லுத லரிதம்மா
கன்றி யேயடல் வீமனும் விசயனுங்
 களம்புகி லனைவீரும்
பொன்றி யேவிடு கின்றிர்நீர் முனிவர்சொற்
 பொய்க்குமோ பொய்யாதே.

12. என்று பூசர னியம்பலுங் குங்கும
 மெழிலுறு மிணைமேருக்
குன்றுபூசிய தனையபொற் றடம்புயக்
 குருகுல வயவேந்த
னின்று பூசைபோ லிருந்தழி யுரைக்குமீ
 திசைதன் றிருவர்க்குந்
துன்று பூசலிற் காணலா மாண்மையுந்
 தோள்வலி மையுமென்றான்.

13. கல்வி தூயநெஞ் சிலாதவச் சுயோதனன்
கழறிய மொழிகேட்டு
வில்வி தூரனிவ் வேதியன் மொழிப்படி
மேதினி வழங்காமற்
புல்வி தூடக ரினுமுணர் விலாதவர்
புகலும்வா சகங்கேட்கிற்
செல்வி தூரிய ளாய்விடுஞ் சுற்றமுஞ்
சேனையுங் கெடுமென்றான்.

14. திரத்து வாய்மைநீ தவறிமற் றவருடன்
சேனையுந் திறலுங்கொண்
டுரத்து வாளம ருடற்றலோ பெரும்பிழை
யுடன்றனை யாமாகிற்
சரத்து வாய்தொறுஞ் சோரிகக் கிடவிடுந்
தனஞ்சயன் றனுவென்று
பரத்து வாசனும் பகர்ந்தனன் கிருபனும்
பகர்ந்ததே பகர்ந்திட்டான்.

15. காடு மன்னுநின் புதல்வருக் கறுதிசெய்
காலமோ கழிந்தன்று
நாடு மன்னவ கொடாமல்வெஞ் சமர்பொர
நாடினை யெனினுனைக்
கோடு மன்னுவி லருச்சுனற் கெதிரவர்
குனிக்கவல் லவரென்று
வீடு மன்றிருத் தனயனோ டுறுதிகள்
வெகுண்டுரைத் தனனன்றே.

16. முன்ன மேயுகி ரிழந்தவெம புலியென
முரணழி முனிமைந்தன்
றன்னை மற்றவ னிடத்துநீ கற்றவெஞ்
சரத்தின்வென் றமையல்லா
லென்ன சேவகங் கொண்டுநீ யாரையு
மிகழ்ந்துரைப் பதுவென்று
கன்ன னுந்திறற் காங்கெயன் றன்னொடு
கண்சிவந் துரைசெய்தான்.

17. தூம வெங்கனற் றேன்றிய தோகையத்
தொடையல்சூட் டியநாளி
ஞம வெஞ்சிலே நாணெடுத் தனேயடா
நரனெடும் போர்செய்தாய்
தாம வெண்குடை நிருபனே யந்தர
சரிதர்கொண் டேகாமல்
வீமன் வெஞ்சிறை மீட்டநா ளினுந்திறல்
வினேபுரி முனேவென்றய்.

18. ஒருதன் மாநெடுந் தேரினே யறிவுரு
வுத்தரன் விரைந்தூர
நெருந லானிரை கவர்தரு முகத்தினு
நின்றனே நெடும்போது
மருந ருவுமிழ் துழாயவன் றேர்விட
மலேயுநாள் வயவாளி
வெருநர் மேல்விடா விசயனே நீயலால்
வெல்லவல் லவருண்டோ.

19. கங்கை மாமக னிவையிவை புகலவுங்
கன்னனேக் கசிந்துட்கொண்
டங்கை கொட்டிநக் கிருந்தவந் தணனேயு
மவமதித் தெமதேபார்
தங்கள் கானகந் தமதெனப் புகன்றனன்
சர்ப்பகே தனனந்தப்
பங்க யாசன முனிவனு மீண்டுபோய்ப்
பாண்டவர்க் கவைசொன்ஞன்.

8. முத்தொள்ளாயிரம்

சங்ககாலத்திற்குப் பிறகு தொகுக்கப்பட்ட சிறந்த நூல்களுள் ஒன்று முத்தொள்ளாயிரம். சேர சோழ பாண்டியர் என்னும் தமிழகத்து மூவேந்தரையும் புகழ்ந்து பாடிய வெண்பாக்கள் உடையது இந்நூல். மூவேந்தரை யும் பற்றிய தொள்ளாயிரம் பாடல்கள் உடையது எனப் பெயர்க் காரணம் கூறுவர். ஆயின், இப்போது கிடைப் பன நூற்றைம்பது பாட்டுக்களே ஆகும். இப்பாட்டுக்கள் சுவை நிரம்பியவை ; கற்பனை வளம் உடையவை ; பாட்டுக் கலைக்கு உரிய கலைச்செல்வம் வாய்ந்தவை. இந்நூலின் காலம் கி. பி. ஐந்து அல்லது ஆரும் நூற்ருண்டு என்பர்.

சேரன்

1. அள்ளற் பழனத் தரக்காம்பல் வாய்அவிழ
வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇப்—புள்ளினந்தங்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங் கவ்வை யுடைத்தரோ
நச்சிலைவேற் கோக்கோதை நாடு.

2. களிகள் களிகட்கு நீட்டத்தங் கையாற்
களிகள் விதிர்த்திட்ட வெங்கட் டுளிகலந்
தோங்கெழில் யானை மிதிப்பச்சே றாகுமே
பூம்பொழில் வஞ்சி யகம்.

3. வானிற்கு வையகம் வென்றது வானத்து
மீனிற் கனையார் மறமன்னர்—வானத்து
மீன்சேர் மதியனையான் விண்ணுயர் கொல்லியர்
கோன்சேரன் கோதையென் பான்.

சோழன்

4. காவல் உழவர் களத்தகத்துப் போரேறி
நாவலோஒ வென்றழைக்கும் நாளோதை—
காவலன்றன்
கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தாற் போலுமே
நல்யானை கோக்கிள்ளி நாடு.

5. மாலை விலைபகர்வார் கிள்ளிக் களைந்தபூச்
சால மருவியதோர் தன்மைத்தால்—காலையே
விற்பயில் வானகம் போலுமே வெல்வளவன்
பொற்பார் உறந்தை யகம்.

6. அந்தணர் ஆவொடு பொன்பெற்றார் நாவலர்
மந்தரம்போல் மாண்ட களிறூர்ந்தார்—எந்தை
இலங்கிலைவேற் கிள்ளி இரேவதிநாள் என்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு.

பாண்டியன்

7. பார்படுப செம்பொன் பதிபடுப முத்தமிழ்நூல்
நீர்படுப வெண்சங்கும் நித்திலமும்—சாரல்
மலைபடுப யானை வயமாறன் கூர்வேற்
றலைபடுப தார்வேந்தர் மார்பு.

8. நந்தி னிளஞ்சினையும் புன்னைக் குவிமொட்டும்
பந்த ரிளங்கமுகின் பாளையும்—சிந்தித்
திகழ்முத்தம் போற்றோன்றுஞ் செம்மற்றே தென்னன்
நகைமுத்த வெண்குடையா னாடு.

9. மடங்கா மயிலூர்தி மைந்தனை நாளுங்
கடம்பம்பூக் கொண்டேத்தி யற்றால் தொடங்கமருள்
நின்றிலங்கு வென்றி நிறைகதிர்வேல் மாறனை
இன்றமிழால் யாம்பாடும் பாட்டு.

9. சரபேந்திர பூபால குறவஞ்சி

இந்நூலாசிரியர் சிவக்கொழுந்து தேசிகர் கும்ப கோணத்தை அடுத்த கொட்டையூரில் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்தவர். அக்காலத்தில் தஞ்சையில் இருந்த சரபோஜி மன்னர், இவருடைய புலமைத் திறத்தைக் கேள்வியுற்றுத் தம்பால் அழைத்துத் தம் அரண்மனைப் புலவராக அமர்த்திக்கொண்டார். மன்னரின் விருப்பத்திற்கிணங்க, பல ஏட்டுச் சுவடிகளைத் தொகுக்கும் பணியில் இவர் ஈடுபட்டார். கோடீச்சுரக் கோவை முதலிய சில நூல்களும் இயற்றினார். இவர் எளிய நடையில் பாடல்கள் இயற்றுவதில் வல்லவர் ; சொல்லணிகள் அமைத்துப் பாடுவதிலும் தேர்ந்தவர்.

இக் குறவஞ்சி நாடகம் 39 கீர்த்தனைகளும் 3 வெண்பாக்களும் 2 அகவல்களும் 25 விருத்தங்களும் 2 கொச்சகக் கலிப்பாக்களும் கொண்டது.

குறவஞ்சி என்பது, நாடக வகையைச் சேர்ந்த சிற்றிலக்கியம் ஆகும். காதலால் வருந்தும் தலைவிக்குக் குறத்தி குறி கூறுவதாக அமைவது இந்நூல். குறம் என்றும் குறத்திபாட்டு என்றும் இத்துறை மற்ற நூல்களில் காணப்படும். குறத்தியின் இயல்பு, அவள் குறி கூறுதல், பிறகு குறவன் அவளைத் தேடிவந்து காணுதல் முதலிய பகுதிகள் இதில் அமைவதால், இப்பெயர் பெறுவதாயிற்று (குறவஞ்சி —குறப்பெண் ; வஞ்சி—வஞ்சிக்கொடி போன்றவள்.)

தலைவி குறத்தியை நோக்கி, 'நீ யார்? உன் நாடு எது? மலை எது?' எனக் கேட்கும்போது, குறத்தி அவற்றிற்கு விடை கூறுவாள். குறத்தி தன் மலையைப் பற்றிக் கூறுவதாக அமைந்துள்ளது இப் பாடப் பகுதி.

குறத்தி தன் சொந்தமலை கூறுதல்

பல்லவி

குடிசைவைத்து வாழுமலை கூறுவன்பூங் கொடியே
கோகிலமே யனப்பெடையே குலவுமிளம் பிடியே

சரணங்கள்

1. தங்கமகா மேருவினிற் றண்குடிசை தொடுத்தோம்
சாபமலை யென்றுரைத்தார் தாபமொடு விடுத்தோம்
சங்கரனார் கைலைமலை தனிலுறையச் சென்றோம்
தவப்பூத கணங்கள் கண்டோஞ் சிவப்பிரீதி யென்றோம்.

2. திங்களணி காளத்தி கண்டதனை நயந்தோம்
திண்ணன் கண்ணைப் பறித்ததுமுன்
னின்னதென்றார் பயந்தோம்
அங்குலவு குற்றால மலையினுறப் போனோம்
அருவியின்மூழ் கிடுவிரென்றார் நழுவிவர லானோம்.

3. ஏறிவட வேங்கிடத்தி லிருக்கவிடம் பார்த்தோம்
இன்னதுமால் கொண்டமலை யென்றுரைத்தார்
தீர்த்தோம்
ஈறிலுயர் பழனிமலை யினிதெனவே குறித்தோம்
இடும்பன்மலை யெனப்புகன்றார் திடங்கொளதை
வெறுத்தோம்.

4. தூறுமுகில் சூழுமொரு தூயமலை தொட்டோம்
தூங்கன்மலை யீங்கிதென்று ராங்கதனை விட்டோம்
கூறுபுகழ்ச் சேரலன்றன் குவடணைந்தோ மப்பால்
கொல்லியிது வென்றுரைத்தார் தள்ளிவந்தோமிப்பால்

5. விராலிமலை சோலைமலை ஸ்வாமிமலை யமமே
விளங்குமெங்கள் குலவள்ளிக் குகந்தளித்தோ மம்மே
பிரான்மலையுஞ் சிராமலையும் பிறமலையு மம்மே
பிறைமுடிமேல் வைத்திருக்கும் பிரான்மலைக ளம்மே.

6. தராதலம்போற் றிடமேவுந் தஞ்சையிலெந் நாளும்
தங்குசர போஜிமன்னர் சிந்தைமகிழ்ந் தாளும்
புராதனமா மலையாகிப் புகழ்தவத்தோர் முந்தப்
பொருந்திவளர் நேரியெங்கள் சிறந்தமலை யம்மே.

7. நேரிமலை மேற்குடிசை நிலைக்கவைத்தோ மம்மே
நீடுமது வெங்கள்குடி தழைக்கவைத்த தம்மே
தாரகைகள் போலமுத்தந் தயங்குமதி லம்மே
சந்தமுறு நேரியெங்கள் சொந்தமலை யம்மே.

10. மாரி வாயில்

ஆசிரியர் : சோமசுந்தர பாரதியார்

மாரிவாயில் என்பதற்கு மேகத்தைத் தூதனுப்பல் என்பது பொருள். கார் முகிலைக் காதல் தூதனுப்புவதாகச் செய்யுள் செய்வது பண்டைய இலக்கிய மரபாகும். இம் மாரி வாயில், பாண்டவரில் நடுப்பிறந்த பார்த்தனுக்கு, அவன் தமிழ்மனைவியான பாண்டியன் மகள், மாரியைத் தூதனுப்பியதாகப் புனைந்து கூறுவது.

இந்நூலாசிரியராகிய நாவலர் சோமசுந்தர பாரதியார் (18—9—1959) திறஞ்சான்ற வழக்கறிஞராயும் பின்னர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராயும் பணியாற்றிய பெருமை மிக்கவர். உள்ளம் உணர்ந்ததை அஞ்சாமல் கூறும் பேராற்றலும், உரைநயங் காணும் புலமைத் திறனும் இவர்தம் இயல்பெனலாம். சிறந்த கட்டுரை யாசிரியராக மட்டும் அன்றி, தேர்ந்த உரையாசிரியராகவும் இவர் விளங்கினர் என்பதற்கு, இவர் தொல்காப்பியப் பொருளதிகாரப் பகுதிகட்கு எழுதிய உரைநூல் சான்றாகும்.

இலக்கியப் புலவராக மட்டுமன்றித் தமிழ் நலம் குறித்துத் தமிழகமெங்கும் எழுத்தாலும் பேச்சாலும் பெருந் தொண்டாற்றிய அறிஞராகவும் விளங்கினர்.

நீலமலை

1. இத்திரு மலையி னீங்கி னிளநில வெறிக்கு மூரல்
முத்திருந் தலர்ந்த செம்பொன் முளரியின்
முகத்தர் வைகல்
மத்திருந் திழுக்கு மாய மகளிர் அங் குழலை மாரி
ஒத்திருந் தொருவா நீல மலையினை யுவந்து காண்பை.

2. நோய்தர அறியாச் சீதம் வளம்செய நுடங்குமஞ்சு
வேய்தர வசந்த மொன்றே விழைந்தவ ணிலவ
வென்று
பாய்தரு மருவித் தாளப் பண்ணொடு மஞ்ஞை யால
ஆய்தர ஞானந் தேடு மழகர சிருக்கும் ஆங்கண்.

3. மாய்தரும் வளமங் கோரா மலையினில் இயற்கைத்
தெய்வம்
காய்தரும் வெயிலின் வெம்மை கண்டறி யாத கானில்
வேய்தரும் குழற்கா லூத மென்சிறை மிழற்ற வெற்பிற்
சேய்தருங் கலுழி பாடச் சிறந்தர சிருக்கு மம்மா.

குறிப்புரை

1. புறநானூறு

1. **பிசிராந்தையார்:**—பாண்டி நாட்டினர்; பிசிர் என்னும் ஊரினர். சோழ நாட்டு மன்னன் கோப்பெருஞ் சோழனிடத்துக் காணுமலே பெருநட்புக் கொண்டவர். அவன் வடக்கிருந்து உயிர் நீத்த செய்தி கேட்டுத் தாமும் உயிர் துறந்தவர். இவர் பாடல்வழி இவர் வாழ்ந்த அமைதி வாழ்வின் பெருமிதம் புலப்படுகின்றது.

2. **கணியன் பூங்குன்றனர்:**—வாழ்க்கைத் தெளிவு மிகுந்த இச் சங்க காலச் சான்ேறார் பாடியுள்ள மணியான பாடல் காலம் பல கடந்தும் உண்மையொளி வீசித் திகழ்கிறது. கணியன் - சோதிடத்தில் வல்லவர்.

3. **பக்குடுக்கை நன்கணியார்:**—நன்கணியார் என்பது இவர் இயற்பெயர். உலகத்தை வெறுத்த ஞானியாதலால், இவர் பையையே உடையாகக் கொண்டிருந்தன ரென்றும் அது பற்றியே 'பக்குடுக்கை' என்னும் அடை இவர் பெயர்க்கு முன் கொடுக்கப்பட்டதென்றும் கூறுவர்.

4. **நரிவெரூஉத் தலையார்:**—இவர், யாது காரணத் தாலோ தம் உடம்பு வேறுபட்டிருந்து சேரமான் கருவூ ரேறிய ஒள்வாட் கோப்பெருஞ் சேரலிரும்பொறையைக் கண்ட நாளில் அவ்வேறுபாடு நீங்கித் தம் உடம்பு பெற்றனர் என்பது புறநானூற்றின் 5 ஆம் பாட்டின் அடிக்குறிப்பிலும் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் பேராசிரியர் உரை (தொல். மெய்ப். நூற்பா 7) யாலும் விளங்கும்.

5. **ஒக்கூர் மாசாத்தியார்:**—இவர் பெண்பாற் புலவர்; ஒக்கூர் என்னும் ஊரினர். இவ்வூர் பாண்டி நாட்டில் திருக் கோட்டியூர்ப் புறத்தேயுள்ள ஓர் ஊர் என்பர். இவர் பாடிய பாடலில் ஒரு மறக்குடி மகளின் வீரப்பண்பு விளங்கக் கூறப் பட்டுள்ளது. பண்டைநாளில் தமிழ்க்குடி மகளிரும் வீர நெஞ்சம் வாய்க்கப் பெற்றிருந்தனர் என்பது வியந்து மகிழத் தக்கது.

திணை - ஒழுக்கம். மக்கள் வாழும் ஒழுக்க நிலைகளைச் சில வகைகளாகப் பிரித்து அவைகளைத் திணை எனப் பெயரிட் டனர். அவற்றின் உட்பிரிவுகளே துறைகள். திணை ஒரு பேராறு என்றால் துறைகள் அதில் இறங்கும் வழித்துறைகள் போன்றன.

திணை — பொதுவியல்: முன் தனித்தனியே வரையறுத்துச் சொல்லப் பெற்ற திணைகளில் சேராதவற்றைத் தொகுத்துப் பொதுவான நீதிகளைச் சொல்லும் பகுதி.

திணை : வாகை : போர்க்களத்தில் வெற்றிபெறும் சிறப் பினைப் பாடுவது. 'போர்க்களத்து மிக்கார் செருவென்றது' வாகையாம்.

துறை : பொருண்மொழிக்காஞ்சி : நிலைத்த பொருள் இஃது என்று வலியுறுத்துவது.

துறை : பெருங்காஞ்சி : நிலையாமையைக் கருதிச் சொல் வதாகும். ''மலையோங்கிய மாநிலத்து நிலையாமை நெறி யுரைத்தன்று'' என்பது புறப்பொருள் வெண்பாமாலை.

துறை : மூதின்முல்லை : மறக்குடியிற் பிறந்த மகளிரின் வீரவுணர்ச்சியினை மிகுதிப்படுத்திக் கூறுவது. ''அடல்வே லாடவர்க் கன்றியு மவ்வில் மடவரன் மகளிர்க்கு மறமிகுத் தன்று'' என்பது புறப்பொருள் வெண்பாமாலை.

1. யாங்காகியர்-எப்படி ஆயினீர். மாண்ட-மாட்சிமை பொருந்திய. நிரம்பினர்-அறிவு நிரம்பப் பெற்றனர். யான் கண்டனையர்-யான் கருதியதையே கருதுவர். இளையர்-ஏவலர். அதன் தலை-அதறகுமேல். ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்-நற்குணங்களால் அமைந்து, பணிய வேண்டும் உயர்ந்தோரிடத்துப் பணிந்து, ஐம்புலனும் அடங்கிய கோட்பாட்டினையுடைய சான்றோர். அல்லது, கல்வியால் நிறைந்து, புலன் ஒடுங்கி, மனம் மொழி மெய்களால் அடங்கிய சான்றோர்.

2. யாதும் - உம் - முற்றும்மை. கேளிர் - உறவினர். தணிதல் - தீர்தல். முனிவின் - வெறுப்பு வந்துற்றபோது. இன்னாது - கொடுமையுடையது. மின் - மின்னல். தலைஇ - பெய்ய. இரங்கும் - ஒலிக்கும். மல்லல் - வளமான. புணை - தெப்பம். முறை -ஊழ். திறவோர் காட்சி - நன்மை தீமை அறிவோர் கூறிய நூல.

3. நெய்தல் - சாக்காட்டுப் பறை (சாப்பறை). கறங்க - ஒலிக்க. ஈர்ந்தண் முழவின் பாணி - மிகக் குளிர்ந்த முழவினது ஓசை (மணப்பறை). ததும்ப - மிக ஒலிக்க. புணர்ந்தோர் - காதலரோடு கூடி மகிழும் மகளிர். பைதல் - துன்பம். உண் கண் - மையுண்ட கண்கள. பனிவார்பு உறைப்ப - நீர் வார்ந்து துளிர்ப்ப. பண்பிலாளன் - (ஈண்டு) படைப்புக் கடவுளாகிய பிரமனை உணர்த்தும். இன்னாது - கொடிது. இயல்பு - தன்மை.

'கொடிது இவ் வுலகின தியற்கை; ஆதலான், இவ் வுலகினது தன்மையறிந்தோர் வீட்டின்பத்தைத் தரும நல்ல செய்கைகளை அறிந்து செய்து கொள்க '' என்பர் புறநானூற்றுப் பழைய உரைகாரர்.

4. சான்றோர் - சான்றீரே - ஈற்றயல் திரிந்து ஏகாரம் ஏற்று விளி ஆயிற்று. கயல் - மீன். நரை முதிர் திரை கவுள் - நரை முதிர்ந்த திரைந்த கன்னம். பயனில் மூப்பின்

பல் சான்றீரே - இகழ்ச்சிக்குக் குறிப்பு. அடுக்கு விரைவுப் பொருளில் ஈண்டு வந்தது. கணிச்சி - மழு. ஒருவன் - (ஈண்டு) யமன். இரங்குவிர் - வருந்துவிர். மாதோ - மாதுஓ - முன்னிலை அசைகள். ஓம்புமின் - பரிகரியுங்கள் - நீக்குங்கள். நல்லாற்றுப் படூஉம் — நல்ல நெறியிலே செலுத்தும். படூஉம் - அளபெடை. மார் - அசை.

5. மூதின் மகளிர் - முதிய மறக்குடியிற் பிறந்த மகளிர். தன்னை - தன்ஐ - தமையன். வெளிது - வெள்ளிய ஆடை. உடீஇ - சொல்லிசை அளபெடை. பாறு மயிர் - கலைந்த தலைமயிர். நீவி - தடவி. செருமுகம் - போர்முனை.

2. திருக்குறள்

1. வாய்மை

சொல்லும் சொற்களில் பொய் கலவாமை ; என்றும் உண்மையே சொல்லுதல் என்பதாம். இது எல்லோருக்கும் தேவையான அறம் ; எனினும் சிறப்பு நோக்கித் துறவற வியலில் வைக்கப்பெற்றுள்ளது.

1. பிற உயிர்களுக்குத் தீங்கு பயவாத சொற்களே வாய்மையாம்.

நிகழ்ந்தது கூறல்தான் வாய்மை என்பதை நீக்கி, மற்றவர்களுக்குத் தீங்கு பயவாத நல்ல சொற்களை வள்ளுவர் வாய்மை என்கிறார்.

வாய்மை - மெய்ம்மை ; எனப்படுவது - என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது ; தீமை யாதொன்றும் - சிறு தீங்கும்.

2. குற்றமற்ற பொய்யும் வாய்மையாம்.

இடத்த - தன்மை உடையன ; புரை தீர்ந்த - குற்றத்தின் நீங்கிய.

3. மனமறிந்த பொய் சொல்லுவது குற்றமாகும்.

பொய்யற்க - பொய்யாது ஒழிக ; சுடும் - துன்பத்தை எய்துவிக்கும்.

4. பொய்யை நினையாதாரை உலகம் போற்றும்.

உள்ளத்தால் - தன் மனம் அறிய ; ஒழுகின் - ஒழுகு வானாயின் ; உளன் - நிலைத்து நிற்பான்.

5. உண்மை பேசுபவன் தானம் தவம் செய்வாரினும் மேம்பட்டவன்.

உண்மையாளன் தவசியினும் மேம்பட்டவன் என வற் புறுத்துகிறார்.

மனத்தொடு - மனம் பொருந்த ; தலை - மேலான சிறப்புடையவன்; 'ஒடு' - மூன்றாம் வேற்றுமை உருபு.

6. வாய்மை, புகழுடன் பிற அறங்களால் வரும் பயன் களையும் தரும்.

எய்யாமை - மெய் வருந்தாமல் ; தரும் - தானே கொடுக்கும்.

7. வாய்மையை மேற்கொள்ளின் வேறு அறங்களைச் செய்ய வேண்டா.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் - பொய்யாமை யை (வாய்மையைத்) தவறாமல் மேற்கொண்டால். செய்யாமை செய்யாமை நன்று - செய்யாதிருத்தலும் நல்லது.

8. வாய்மை உள்ளத்தைத் தூய்மை செய்வது.

புறந்தூய்மை - உடல்தூய்மை; அகந்தூய்மை - உள்ளத் தூய்மை ; காணப்படும் ; உண்டாகும்.

9. பொய்யாமையே நல்ல ஒளி விளக்கு.

ஞாயிறு முதலியவற்ருல் போகாத அக இருளைப் போக்கலின் 'பொய்யா விளக்கு' என்ருர்.

சான்றோர்க்கு - ஒழுக்க சீலர்க்கு.

10. எந்த அறமும் வாய்மைக்கு ஈடாகாது.

மெய்யாக் கண்டவற்றுள் - மெய்நூல்களாகக் கண்ட வற்றுள் ; நல்ல - மிக நல்லனவாக.

2. வெகுளாமை

''வெகுளாமையாவது, வாக்கினுல் பொய் சொல்லாதது போலே மனத்தினுல் குற்றமாகிய கோபத்தையும் விடுதல் என்றவாறு'' என்பர் பரிதியார். ''வெகுளுதற்குக் காரணம் உள்ள இடத்தும் வெகுளாராதல்'' என்பது மணக்குடவர் வாக்கு. ''சினத்தைச் செய்தற்குக் காரணம் ஒருவன்மாட்டு உளதாய இடத்தும் அதனைச் செய்யாமை'' என்பர் பரி மேலழகர்.

வெகுளாமைக்கு இடம்

1. சினம் பலிக்கும் இடத்தும் சினம் காக்க வேண்டும்.
காப்பான் - எழாமல் தடுப்பவன். அல் இடத்து - வெற்றி பெறமுடியாதவிடத்து.

வெகுளியது தீங்கு

2. பலிக்காத இடத்தில் (தன்னைவிட வலியவரிடத்தில்) சினம் சொள்வது தீங்கு. அதுபோன்றே பலிக்கும் இடத்திலும் (தன்னின் மெலியவரிடத்தில்) சினங் கொள்ளலாகாது.

செல்லா இடத்து - வலியவரிடத்து. செல்லிடம் - மெலியாரிடத்து.

3. தீமையான விளைவுகள் சினத்தாலே ஏற்படும்.

மறத்தல் - ஒழிக.

''வலியார், ஒப்பார், எளியார் என்னும் மூவர் மாட்டும் ஆகாமையின், 'யார் மாட்டும்' என்றும், மனத்தால் துறந்தார்க்கு ஆகாதனவாகிய தீச் சிந்தைகள் எல்லாவற்றையும் பிறப்பித்தலின், 'தீய பிறத்தல் அதனான் வரும்' என்றும் கூறினர்.'' (பரிமேலழகர்)

4. முகமலர்ச்சியையும் அகமலர்ச்சியையும் கொல்லுவது சினமாம்.

சினத்தின் - சினத்தைக் காட்டிலும்.

வெகுண்டார்க்கு வரும் தீங்கு

5. தன்னைக் காக்க நினைக்கின் ஒருவன் தன் சினத்தைக் காக்க வேண்டும்.

காக்கின் - துன்பம் எய்தாமல் காக்க நினைத்தால். தன்னையே என்பதிலுள்ள ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது.

6. சினம் என்னும் நெருப்பு இனம் என்னும் இன்பத் தெப்பத்தைத அழிக்கும்.

சேர்ந்தாரைக் கொல்லி - நெருப்பு; இது காரணக் குறி.

7. சினத்தைப் பொருளென்று கொண்டவன் அழிதல், நிலத்தை அறைந்தவனுடைய கை தப்பாதது போன்று உறுதியாகும்.

பொருளென்று - குணமென்று. கேடு - முதனிலை திரிந்த தொழிற்பெயர். பிழையாத தற்று என்பது பிழையாதற்று எனக் குறைந்து நின்றது.

வெகுளாமையது நன்மை

8. பல சுடர்களையுடைய தொரு நெருப்பில் தோய்வது போன்ற துன்பத்தை ஒருவன் செய்தபோதும் அவன் மேல் சினங் கொள்ளாதிருத்தல் உயர்ந்தசெயலாகும்.

இணர் எரி - பல சுடரை உடைத்தாய பேரெரி. அனைய - போல. உவமவுருபு. இன்னா - கொடியன. புணரின் - கூடுமாயின்.

"பூங்கொத்தை அக்கினியில் இட்டாற்போலே ஒருவர் தனக்குப் பொல்லாங்கு செய்தாலும் அவ்விடத்தும் கோபம் விடுகை நன்று என்றவாறு." (பரிதியார்)

வெகுளாதார்க்கு வரும் நன்மை

9. மனத்திலும் கோபம் விடுவானாகில், நினைத்த செயல் அனைத்தும் கைகூடும்.

உள்ளியதெல்லாம் - நினைத்ததெல்லாம். உடன் எய்தும் - ஒருங்கே பெறும். உள்ளான் - நினையான்.

சினம் மிகுதலின் இழிவும், துறத்தலின் நன்மையும்

10. சினத்தில் மிகுந்தவர் இறந்தவரைப் போல்வர். சினத்தை அடியோடு துறந்தவர் துறந்தவர்க்கு ஒப்பாவர்.

இறந்தார் - சினத்தின் கண்ணே மிக்கார். இறந்தார் - செத்தார். அனையர் - ஒப்பர். வெகுளாதார் பெரியர் என்றவாறு.

3. இன்னா செய்யாமை

தனக்கு ஒரு பயன் விளையும் எனக் கருதிச் சினம் பற்றியாவது சோர்வு பற்றியாவது ஒருயிர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமை.

ஒருபயன் நோக்கியும் இன்னா செய்தலை யொழிக

1 பழி வாராத செல்வம் பெறினும் தவிர்க.

மாசற்றார் - குற்றமற்ற தூய்மையர். கோள் - கோட்பாடு, துணிவு. முதனிலை திரிந்த தொழிற் பெயர்.

செற்றம் பற்றிச் செய்தல் விலக்குதல் வேண்டும்

2 தனக்கு ஒருவர் மனங் கன்றப் பொல்லாங்கு செய்தாலும் அவனுக்குத் தான் திரும்பப் பொல்லாங்கு செய்யா திருத்தல் நல்லோர் கொள்கையாகும்.

செற்றம் பற்றிச் செய்தல் விலக்குதல் வேண்டும்.

கறுத்து - சினந்து. செய்தவக் கண்ணும் - செய்த விடத்திலும் - உம்: இறந்தது தழீஇய எச்சவும்மை, விகாரத்தால் தொக்கது. மறுத்து - மீண்டு.

3 காரணமின்றி இன்னாதனசெய்தவர்க்கும்பொல்லாங்கு செய்தலைத் தவிர வேண்டும்.

செற்றார் - கோபங் கொண்டவர்; வினையாலணையும் பெயர். உய்யா - கடக்க முடியாத ; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். விழுமம் - துன்பம்.

4 தனக்குப் பொல்லாங்கு செய்தார்க்கும் அவர் நாண நன்மையே செய்வது தகுதி.

ஒறுத்தல் - தண்டித்தல். நன்னயம் - இனிய உவகை; நல்லுதவி.

சோர்வாலும் இன்னு செய்யற்க

5. மற்ற உயிரின் துன்பத்தைத் தான் உற்ற துயராகப் பாவிப்பதே கற்ற கல்வியின் சிறப்பாகும்.

போற்ருக் கடை - காவாதவிடத்து.

6. ஒருவன் துன்பமானவை என்று தன் வாழக்கையில் கண்டு உணர்ந்தவைகளை மற்றவனிடத்தில் செய்யாமல் தவிர்க்க வேண்டும்.

துன்ஞமை - மேவாமை ; செய்யாமல் தவிர்த்தல்.

7. எவ்வளவு சிறிய துன்பச் செயலாயினும் எக்காலத்தும் எவரிடத்திலும் எண்ணிச் செய்யாதிருத்தல் சிறந்தது.

எனைத்தானும் - சிறிதாயினும். எஞ்ஞான்றும் - எக்காலத்தும். மாஞ - இன்னுத செயல்கள். தலை - மேலாய அறம்.

''யாதொன்ருயினும் எல்லா நாளும் யாவர் மாட்டும் இன்னுதவற்றை, மனத்தினுலும் செய்யாமை நன்று என்றவாறு'' (மணக்குடவர்).

''ஆரளவிலும் பொல்லாங்கு செய்யாமல் மனத்தாலும் நினையாமல் இருப்பது தலைமை என்றவாறு'' (பரிதியார்).

8. தன் உயிர்க்குத் துன்பமானவை இவை என்று உணர்ந்தவன் பிற உயிர்களுக்கு அத் துன்பங்களைச் செய்தல் தகாதாம்.

மன்னுயிர்க்கு - நிலைபேறுடைய பிறவுயிர்கட்கு.

இன்னுதன செய்தலால் வரும் குற்றம்

9. முற்பகலில் பிறர்க்கு இன்னுதன செய்தால், பிற்பகலில் இன்னுதன பல தாமாகவே தமக்கே வரும். முற்பகல் பிற்பகல் என்பன பின்முன்னுகத் தொக்க ஆரும் வேற்றுமைத் தொகை.

10. துன்பம் இல்லாமல் வாழ விரும்புகின்றவர் பிறர்க்குத் துன்பம் ஒருபோதும் செய்யார்.
நோய் - கொடிய செயல்கள்.

''இக்காலத்து நுகர்கின்ற துன்பமெல்லாம் முற்காலத்துப் பிறர்க்குத் துன்பம் செய்தார்மாட்டே உளவாம்,'' ஆதலால். இக்காலத்துப் பிறர்க்குத் துன்பத்தைச் செய்யார் வருங் காலத்துத் தமக்குத் துன்பம் வாராமையை வேண்டுபவர் என்றவாறு'' (மணக்குடவர்).

இச் செய்யுளில் சொற்பொருட் பின்வரு நிலையணி அமைந்துள்ளது.

4. ஊழ்

''இருவினைப் பயன் செய்தவனையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன ஒரு பொருட் கிளவி'' என்று பரிமேல ழகரும், ''முன்பு செய்த வினை பின்பு விளையும் முறை'' என்று மணக்குடவரும், ''போன சென்மத்தின் வினைப்பயன்'' என்று பரிதியாரும் ஊழினைப் பற்றி விளக்கம் தந்துள்ளனர்.

பொருட்குக் காரணமாகிய ஊழின் வலி

1. ஆக்கங் கொடுக்கின்ற ஊழ் முயற்சியினையும், அழிவு கொடுக்கின்ற ஊழ் சோம்பலினையும் தோற்றுவிக்கும். ஆகு ஊழ் - ஆதற்குக் காரணமாகிய ஊழ். அசை வின்மை - முயற்சி. போகு ஊழ் - அழிதற்குக்காரண மாகிய ஊழ் . மடி - சோம்பல். ' ஆகூழ் ' 'போகூழ்' என்னும் வினைத்தொகைகள் எதிர்காலத் தான் விரிக்கப்பட்டுக் காரணப் பொருளவாய் நின்றன.

2. அறிவும் அறியாமையும் ஊழால் வரும்.

பேதைப்படுக்கும் - அறிவற்றவனுக்கும். இழவு ஊழ் - கைப்பொருள் இழத்தற்குக் காரணமாகிய ஊழ். ஆகல் ஊழ - கைப் பொருள் ஆதற்கு ஏதுவாகிய ஊழ். 'இழவு ஊழ்,' 'ஆகலூழ்' என்பன இரண்டும்வேற் றுமைத் தொகை.

3. கல்வியினும் ஊழானாய அறிவு வலியுடைத்து.

உண்மை அறிவே - ஊழானாகிய பேதைமை உணர்வு. ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது. மிகும் - மேற்படும்.

4. ஒருவர் செல்வமுடையராதலும் அறிவுடையராதலும் வெவ்வேறு ஊழினால் விளைபவைகளாம்.

திரு - செல்வம். தெள்ளியர் - அறிவுடையர். ''செல்வத்தினைப் படைத்தலும் காத்தலும் பயன் கோடலும் அறிவுடையார்க்கல்லது இயலாவன்றே; அவ்வாறன்றி அறிவுடையார் வறியராகவும் ஏனையார் செல்வராகவும் காண்டலான், அறிவுடையராதற் காகும் ஊழ் செல்வமுடையராதற்கு ஆகாது; செல்வ முடையராதற்காகும் ஊழ் அறிவுடையராதற்கு ஆகாது என்றதாயிற்று. ஆகவே, செல்வம் செய்யுங் கால் அறிவாகிய துணைக் காரணமும் வேண்டா என்பது பெற்றாம்'' என்ற பரிமேலழகர் விளக்கம் ஈண்டு ஊன்றி நோக்கத்தக்கது.

5. அழிக்கும் ஊழ் உற்றவழிக் காலம் முதலிய நல்லவா யினும் அழியும்; ஆக்கும் ஊழ் உற்றவழி அவை தீயவாயினும் ஆகும்.

செல்வம் செயற்கு - செல்வத்தை ஆக்குதற்கு.

நல்லவை தீயவை என்பன காலமும், இடனும், கருவி யும், தொழிலும் முதலாயவற்றை.

6. முன்புள்ள செல்வம் காவற்படுதலும் களவு போதலும் ஊழினாலேயேயாகும்.

பரியினும் - வருந்திக் காப்பினும். பால் அல்ல - ஊழல்லாத பொருள்கள். தம - தமக்கு வரவேண்டிய பொருள்கள். உய்த்துச் சொரியினும் - புறத்தே கொண்டு போய்ச் சொரிந்தாலும். போகா - தம்மை விட்டு நீங்கா.

இன்ப துன்பங்கட்குக் காரணமாய ஊழின் வலி

7. பொருள் பெற்றாலும் அதனை நுகர்தற்கு ஊழின் துணை தேவை.

வகுத்தான் - தெய்வம். தொகுத்தார் - முயன்று ஈட்டியவர்கள். துய்த்தல் - நுகர்தல்.

8. துறவறமானது ஊழினால் வரும்.

துப்புரவு - துய்க்கவேண்டிய பொருள்கள். உறற்பால - அனுபவிக்க வேண்டிய துன்பங்கள். ஊட்டா - உண்டாக்காது. கழியும் - ஒழியும். துறப்பார், ஆர்ஈற்று எதிர்கால முற்றுச் சொல். மன் ஒழியிசைக் கண் வந்தது.

9. நன்மை வருங்காலத்து நன்றாகக் காண்பவர் தீமை வருங்காலத்துத் துன்பப்படுவது தகாது.

நன்றாங்கால் - நல்வினை விளையுங்கால். அன்றாங்கால் - தீவினை விளையுங்கால். அல்லற்படுவது - துன்பம் உழப்பது.

இருவகை ஊழின் வலி

10. ஊழினைக் காட்டிலும் வன்மையுடைய சக்தி வேறொன்றில்லை.

ஊழின் - ஊழைப்போல. இல் - போல, உவமவுருபு. பெரு வலி - மிக்க வலியுடையது. மற்றொன்று - (ஊழினைத் தவிர்க்க) அதற்கு மறுதலையாவதோர் உபாயம். சூழினும் - ஆராய்ந்தாலும். முந்துறும் - முற்பட்டு நிற்கும்.

பெரு வலி - ஆகு பெயர். சூழினும் - உம் எச்சவும்மை.

"தமக்கு விதியினால் வருவது ஒழியத் தம் அவாவினால் வேறொன்று வரக் கருதினும் அஃதிறந்து மற்று அவ் விதியினால் வருவது தானே வந்து முன்னுற்று நிற்கும்" என்பர் காளிங்கர்.

'சூழ்வினை நான்முகத் தொருவற் சூழினும்
ஊழ்வினை யொருவரால் ஒழிக்கற் பாலதோ"

என்றார் கம்பர்.

3. சிலப்பதிகாரம்

2. அரிமா - சிங்கம். அமளி - தவிசு, இருக்கை.

3. திரு - திருமகள். வீழ் - விரும்பும். தென்னவர் - பாண்டியர்.

5. அறிவு அறை போகிய - அறிவு கீழற்றுப் போகிய.

பொறியறு - புண்ணிய மற்ற.

6. இறைமுறை - அரச நீதி. பிழைத்தோன் - தவறியவன்.

13. பஞ்சவன் - பாண்டியன். படரா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

15. பிடர்த்தலை - கடாவின் தலை.

17. அறுவர்க்கிளைய நங்கை - சத்த மாதர்களில் ஏழாவதினையாள் ; அவள் பிடாரி.

17-18. இறைவனை ஆடல் கண்டருளிய அணங்கு - பத்திரகாளி.

20. பேருரம் - பெரிய மார்பு.

21. செயிர் - சினம்.

25. மற்றவட் டருக - அவளை இங்கு அழைத்து வருக.

28. நீர்வார் கண்ணை - நீர் வார்ந்த கண்ணையுடையாய்.

29. மடக்கொடி - இளைய கொடி போன்றவள்.

30. தேரா மன்ன - ஆய்ந்து தெளியாத மன்னவ. தேரா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். மன்ன - விளி.

32. புள் - புரு. புன்கண் - துன்பம். தீர்த்தோன் - சிபி.

33. நடுங்க - அசைய.

34. கடைமணி - கண்மணிக்கடை.

45. வெள்வேற் கொற்றம் - அரச நீதி.

46. நற்றிறம் படரா - நல்ல நெறியில் செல்லாத.

47. மணி - மாணிக்கம்.

48. செவ்வை நன்மொழி - செவ்விய சொல்.

50. தா - அசை.

52. வாய்முதற் றெறித்தது மணியே - சிலம்பு தானே விண்டு மணிவாய்முதல்தெறித்த தென்க.

57. என்முதல் - என்னைத் தொடங்கி.

60. கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்றது : தந்தை தாய் முதலாயினோரை இழந்தார்க்கு அம் முறை சொல்லிப் பிறரைக் காட்டலாம்; இஃது அவ்வாறு வாக்கானும் சொல்லலாகாமையின், காட் டுவதில்லென்றாள்.

4. பெரிய புராணம்

1. தாண்டவம் - நடனம்; தம்பிரான் - சிவபெருமான்; ஆண்ட - அடிமை கொண்ட; அரசின் - திருநாவுக்கரசருடைய; காண்தகு - காணுதற்குத் தகுந்த; காதல் - அன்பு; அறியா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; தகுகாதல்: வினைத்தொகை.

2. காமம் - விருப்பம்; காய்ந்தார் - ஒழித்தவர்; மனை - வீடு; மனைப்பால் - தம்முடைய வீட்டில்; அளவைகள்- (நாழி, படி, மரக்கால் முதலிய) முகத்தலளவைப் பொருள்கள்; நிறைகோல் - தராசு முதலிய எடுத்தலளவைகள்; ஆ - பசு; மேதி - எருமை; காய்ந்தார் - இறந்தகால வினையாலணையும் பெயர். வாழ்க்கை: தொழிற் பெயர். நிறைகோல்: இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

3. மன்னு - பொருந்திய; சீர் - சிறப்பு; நாமம் - பெயர், படி - உலகம். இச் செய்யுள் குளகமாகும். (பல பாடல்கள் ஒரு வினைகொண்டு முடிந்தால் குளகம் என்று பெயர் பெறும்). மன்னுசீர்: வினைத்தொகை. பந்தர் - பந்தல் என்பதன் போலி. முடிவு: தொழிற்பெயர். இலா: ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்;

4. பொருப்பு அரையன் - மலைகளுக்குத் தலைவனாகிய இமயமலை; மடம் - இளமை; பிடி - பெண் யானை. இப்பாடலில் பிடி என்பது பார்வதியையும் களிறு என்பது சிவபெருமானையும் குறிக்கும். திருப்பழனம் - திருப்பழனம் என்னும் சிவத்தலம். மருங்கு - பக்கம்; மேவுவார் - செல்பவரானார்; அரையன் - அரசன். மடப்பிடி: அடையடுத்த உவமையாகு பெயர்.

ஒருப்படுகாதல்: வினைத்தொகை. பிறவும் -உம்மை: இறந்தது தழுவியது. விருப்பு, விரும்பு என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

5. செலவு - செல்லுதல்; ஒழியா - நீங்காத; உளம் அனைய - நெஞ்சினை யொத்த; தண் அளித்தது ஆய் - குளிர்ந்த கருணையை யுடையதாய்; உறு - மிக்க; வேனில் - கோடை; பரிவு - துன்பம்; தடம் - தடாகம்; அணைந்தார் - சேர்ந்தார். இச்செய்யுள் தன்மை நவிற்சியணியாகும். அனைய: குறிப்புப் பெயரெச்சம். அளித்து - குறிப்பு வினையாலணையும் பெயர்.

6. மந்த மாருதம் - மெல்லிய காற்று. (தென்றற் காற்று). சீதம் - குளிர்ச்சி; சந்தம் ஆர் - அழகு பொருந்திய; சிநதை - மனம். வருவார் - முற்றெச்சம். வரைந்தது - இறந்த காலத் தொழிற்பெயர். மருங்கும் - உம்மை முற்றுப்பொருளது. தாம், அசை.

7. ஆண்ட அரசு - திருநாவுக்கரசர்; செப்பருஞ்சீர்- சொல்ல முடியாத பெருமையையுடைய; கா - சோலை. இப்பாட்டில் நல்ல ஓட்டம் அமைந்திருப்பதைக் காண்க.

8. இதற்கென்னே கருத்து - இதன் உட்கிடக்கை யாது? நின்றவர் - வினையாலணையம் பெயர். வினவ - கேட்க. துன்றிய நூல் மார்பர் - அந்தணர். தொல்பதி- பழமையான ஊர். சேய்த்தன்று - தொலைவில் இல்லை; நணித்து - அண்மையில் உள்ளது.

9. முனிவரும் - திருநாவுக்கரசரும்; கடைத்தலை - தலைவாசலிடத்தில்; சார்வு - சேர்தல்; மறைத்தலைவர் - வேதம் வல்லாருள் தலைவர்; பிரான் - சிவபெருமான்; தமர் ஒருவர் - அடியவர் ஒருவர்; செழு கடை - தலைவாசல்; நண்ணினர் - அடைந்தார். அகன்று-

இறந்தகால வினையெச்சம். தலைக்கடை - கடைத் தலை என்பதன் போலி.

10. கடிதணைந்து - விரைந்து வந்து; வாகீசர் - வாக்குக்கு அரசர், திருநாவுக்கரசர். கழல் - பாதம்: முடிவில் - முடிவில்லாத; வடிவு - தோற்றம்.

11. இறைஞ்சி - வணங்கி; தகைமை - தகுதியுடைமை ; புகல்வார் - சொல்வார்.

12. ஆறு - கங்கையாறு; சடைமுடியார் - சிவபெருமானார்; ஈறு இல் - முடிவு இல்லாத: நும்பேர் - உம்முடைய பெயரை; என்கொல் - என்ன காரணமோ? கோதுஇல் - குற்றமில்லாத; கொற்றவனார் - வெற்றி பொருந்திய திருநாவுக்கரசர்; மொழிந்தார் - கூறினார்; எழுதாது: எதிர்மறை வினையெச்சம். பேர் - பெயர் என்பதன் மரூஉ; என்கொல்: கொல்: அசை.

13. கேளா - கேட்டு; அருளிச் செய்திலீர் - கூறினீரல்லீர்; நாண்இல் - வெட்கம் இல்லாத; அமண் - சமண மதம்; பதகருடன் - பாதகர்களுடன்; ஒன்றிய மன்னவன் - பல்லவ அரசன்; வெகுள்வார் - கோபிப்பவராய்; கேளா - உடன்பாட்டிறந்தகால வினையெச்சம். வெகுள்வார் - முற்றெச்சம்.

14. கழல் - இறைவன் திருவடி; நயந்த - விரும்பிய; இம்மை - இப்பிறவி; வெம்மை மொழி - சுடுசொல்.

15. மிதப்பில் - தெப்பத்தினால்; போந்து ஏறும் - சென்று கரையேறும். அம் கணர்தம் - அழகிய நெற்றிக் கண்ணை யுடைய சிவபெருமானின்; புவனம் - உலகம்; திருவேடம் - சிவனடியார் வேடம்; இயம்பினார் - கூறினார்; பொங்குகடல்: வினைத்தொகை. கல்மிதப்பு: இருபெயரொட்டுப் பண்புத் தொகை. இயம்பும்: முன்னிலைப் பன்மையெதிர்கால வினைமுற்று.

16. உரைசெய்வார் - சொல்லுவாராய்; துறையினின்று - வழியினின்று; பெருஞ் சூலேயினுல் - பெருத்த சூலே நோயினுல்; உணர்வு - அறிவு; சிறுமையேன் - சிறுமையுடையவன்; செய்வார்: முற்றெச்சம். சூலே- வட சொற்றரிபு.

17. அறிய - தம்மையறியும்படி; கர கமலம் - கையாகிய தாமரை; உரை குழறி - பேச்சுக்கள் தடுமாறி; உரோம புளகம் - மயிர்ச் சிலிர்ப்பு; சரண கமலம் - பாதத் தாமரைகளே: பூண்டார் - அணிந்துகொண்டார்; கரகமலம், சரண கமலம்: வட சொற்றொடர்கள்.

18. வாசீகர் - திருநாவுக்கரசர்; அற்றவர்கள் - செல்வமில்லாதவர்கள்; அருநிதியம் - அரிய செல்வத்தை; களிகூர - மகிழ்ச்சி மிக; சூழ - சுற்றி; அருநிதியம்: பண்புத் தொகை. அம் - சாரியை. அற்றவர், பெற்ருர்: வினேயாலணேயும் பெயர்கள். களி: முதனிலேத் தொழிற்பெயர். இச்செய்யுள் உவமையணி.

19. மூண்ட - மிகுந்த; ஈண்ட - நெருங்க; மனே அகத்தெய்தி - வீட்டின் உள் சென்று; ஓகை - உவகை; கொடு - கொண்டு; இடைக்குறை விகாரம்.

20. இறைஞ்சி - வணங்கி; ஆராத - தணியாத.

21. ஆசனத்தில் - பீடத்தில்; பூசனேகள் - பூசைக்குரிய பொருள்கள்; வாசம் - வாசனே; அமுது செய்விக்கும் - உண்பிக்க வேண்டுமென்கின்ற; நேசம் - அன்பு; நேர்ந்தார் - உடன்பட்டார்; ஆசனம், பூசனே, மனம் முதலியன வட சொற்களின் திரிபுகள்.

22. சேயவர் - குழந்தைகள்.

23. அறுவகைச் சுவையால்-அறுவகைப்பட்ட சுவைகளால் (அறுவகைச் சுவையான -புளிப்பு, தித்திப்பு, கார்ப்பு,

உவர்ப்பு, துவர்ப்பு, கைப்பு என்பன); சேயவர் தம்மில் - தங்களுடைய பிள்ளைகளுள்; பொற் குருத்து - அழகிய குருத்தினை; தூய: குறிப்புப் பெய ரெச்சம். மூத்த: இறந்தகாலப் பெயரெச்சம்; மூ - பகுதி.

24. ஏவ - கட்டளையிட; விரைந்து - வேகமாக; ஒல்லை - விரைவாக; புக்கு - புகுந்து; மல்லல் - வளப்பம்; வாள் அரா ஒன்று - வாள் போன்ற கொடிய பாம்பு ஒன்று; அல்லல் - துன்பம்; அழுங்கி - மனம் நொந்து; தீண்டிற்று - கடித்தது. அகம் + கை : அங்கை. மல்லல் - வளப்பம் என்ற பொருளைத் தரும் உரிச் சொல். ''மல்லல் வளனே'' என்பது தொல்காப்பி யம்.

25. கவர்ந்து சுற்றி - கவ்விச் சுற்றிக்கொண்டு: எரி - கோபத்தீ; காந்துகின்ற - சொலிக்கப் பெற்ற; பை அரா - படத்தையுடைய பாம்பு; பாந்தள் - பாம்பு; வெய்ய - கொடிய; விழாமுன்னம் - விழுவதற்கு முன்பே; கொய்த - அரிந்த; வெய்ய: குறிப்புப் பெய ரெச்சம். வீழா: ஈறு கெட்ட எதிர்மறைப் பெய ரெச்சம். எய்தி - எய்து, பகுதி.

26. விடவேகம் - விடத்தின் மிகுதி; போதுவான் - செல் லுபவன்; முந்த - மிக; மாசுணம் - பாம்பு; திருந் திய - திருத்தம் பெற்ற; செழுமனை - வளமிக்க மனை; புக்கான் - புகுந்தான்; புகு - பகுதி. பகுதி இரட் டித்தது.

27. எரிவிடம் - எரிகின்ற விஷமானது; தெரிவு உற - தெரியும்படியாக; எயிறும் - பற்களும்; மேனி - உடம்பு; விரிஉரை - வெளிப்பட்ட பேச்சுக்கள்; பரி கலக்குருத்து - உண்கலமாகிய வாழைக்குருத்து; படி மேல் - பூமியின் மேல்; எரிவிடம்: வினைத்தொகை. உவமைத் தொகையுமாம்.

28. தளர்ந்து - சோர்வுற்று; உளம் பதைத்து - மனத்தில் துடிப்புக் கொண்டு; உதிரம் - இரத்தம்; வடிவம் - வடிவத்தையும்; துளங்குதலின்றி - மனங்கலங்குதலில்லாமல்; சூழ்வார் - ஆலோசிப்பவரானார்; வீழ்மகன் : வினைத் தொகை. உளம் - உள்ளம் என்பதன் தொகுத்தல் விகாரம். வீந்தான் : வீ - பகுதி; சூழ் வார்: முற்றெச்சம். இச்செய்யுள் குளகம்.

29. பெறலரு - பெற முடியாத; பெய்து - இட்டு; முன்றில் - இல் முன்; முன்பின்னாகத் தொக்க இலக்கணப் போலி. புடையினில் - பக்கத்தில்; அற - முற்றும்; விறல் - வெற்றி.

30. அடிசில் - சோறு; காலம் - வேளை; தாழ்க்கின்றது - தாமதிக்கின்றது. கடிது - விரைந்து; உய்ய - வாழ்வு பெற ; கடிது - கடுமையென்ற பகுதியினடியாகப் பிறந்த குறிப்பு முற்றெச்சம்.

31. அருந்தவர் - அந்தணர்; செய்ய - சிவந்த; விளக்கி- தூய்மை செய்து; பரி கலம் - உண்ணும் கலம்; வெண்ணீறு - திருநீறு; சாத்தி - பூசி.

32. ஆதி - முதன்மையாகவுள்ள; நான்மறை - நான்கு வேதங்கள்; வாய்மை - உண்மை; மேதகு - மேன்மை பெற்ற; பூதி - விபூதி (திருநீறு); சேய் - மகன்; உதவான் - உபயோகப்பட[illegible]மாட்டான்; மேதகு பூதி: வினைத்தொகை.

33. அவ்வுரை - அந்தப் பேச்சை; செவ்விய - நேர்மையான; தடுமாற்றம் - கலக்கம்; சேர - தோன்ற; என் உள்ளம் - என்னுடைய மனம்; பொறுது - பொறுக்க மாட்டாது; உரையுமே - சொல்லும் . விதிர்ப்பு - உடல் நடுங்குதலை. செவ்விய: குறிப்புப் பெயரெச்சம். தடுமாற்றம்:தொழிற்பெயர். உரையும்: செய்யுமென்னும் வாய்பாட்டு ஏவற்பன்மை முற்று.

34. இதுபேறு - இந்தப் பாக்கியம்; பிழைக்க - இழக்கும் படி; வருவது - வருமாறுள்ளது; மாதவர் - பெருந் தவமுடைய அந்தத் திருநாவுக்கரசர்; தெரிவு உற - நன்கு தெரியும்படி; சீலத்தால் - தன்மையால்; சிந்தை நொந்து - மனம் வருந்தி; பரிவொடு - மன வருத்தத்தோடு; பகர்ந்தார் - கூறினர்; வருவது : ஒன்றன்பால் வினையாலணையும் பெயர். ஏனும் - எனி னும் என்பதன் மரூஉ. உற்றது: வினையாலணையும் பெயர்.

35. கேளா - கேட்டு; புரிந்த - செய்த; வண்ணம் - விதம் இ தன்மை - இவ்வாறான செய்கையை; ஆவி தீர் - உயிர் நீங்கியிருந்த; அண்ணலார் - சிவபெருமான்; பா - பரவிய; இசைப் பதிகம் - சுரங்களோடு கூடிய பதிகத்தை; பணிவிடம் - பாம்பின் விடம்; பாற்று வித்தார் - நீங்கும்படி செய்தார்; ஓர் சவம் - வினைத் தொகை. நன்று : ஒன்றன்பாற் குறிப்பு வினைமுற்று.

36. தீவிடம் - கொடிய பாம்பின் விடம்; திருமறையவர்- வேதம் வல்லவரான அப்பூதியடிகள்; சேய் - புதல் வன்; சே உகைத்தவர் - இடபத்தை வாகனமாகக் கொண்டவர் (சிவபெருமான்); புனிதநீறு - பரிசுத்த மான திருநீறு; தீவிடம் : பண்புத் தொகை. உறக் கம் : தொழிற் பெயர். எழுவான் : வினையாலணை யும் பெயர்.

37. பிரிவுஉறும் - உடலைவிட்டுப் பிரியும்; ஆவி - உயிரை; தொண்டின் நெறியினை - அடிமைத் தொண்டின் முறைமையை; பயந்தார் - பெற்றவரான; இடை யூறு - தடையை; நொந்தார் - வருந்தினர்; பயந் தார் : வினையாலணையும் பெயர். பய, பகுதி.

38. வாட்டம் - துன்பம்; தகுவன - தகுதியுடையன ; சார்வார் - நெருங்கினர்.

39. புகழ்ந்த - நூல்களில் சிறப்பிக்கப்பட்ட; கோமயத்து நீரால் - சாணத்தோடு கலந்த நீரினல்; பொலிய - விளங்க; நீவி - மெழுகி; சுதையும் - வெண்ணிறப் பொடியையும்; போக்கி - கோலமாக இட்டு; கதலி - வாழையின்; விளக்கி - சுத்தி செய்து; ஈர்வாய் - அரிந்த இடம். ஈர்வாய் : வினைத் தொகை.

40. திருந்திய - திருத்தம் பெற்ற; வாசம் - நறுமண முள்ள; திருக்கை - தம்முடைய கைகளை; நீவி - கழுவி; அமுது செய்வீர் - உண்பீர்களாக; ஏவல் செய்வார் - கட்டளையைச் செய்பவராய்; ஏவல் - ஏவுகை; ஏவுதலைக் கொண்ட செயலுக்குத் தொழி லாகு பெயர்.

41. மைந்தரும் - பிள்ளைகளும்; மருங்கிருந்து - பக்கத்தி லேயிருந்து; சிந்தை மிக்கு - மகிழ்ச்சி மிகுந்து; இல்ல மாதர் - அடிகளாரின் மனைவியார்; நல்க - அளிக்க (பரிமாற). கொந்து அவிழ் - கொத்தாக மலர் கின்ற; கொன்றை - கொன்றைப் பூவை; வேணி - சடைமுடியில்; கூத்தனுர் - சிவபெருமான்; அத் தமிழ் ஆளியார் - அழகிய தமிழ்த் தலைவராகிய திரு நாவுக்கரசர்; கொந்து: கொத்து என்பதன் மெலித் தல் விகாரம். கொன்றை : பொருளாகு பெயர்.

42. நாவின் மன்னர் - திருநாவுக்கரசர்; செல்வ மனை யிடை - செல்வம் மிகுந்த மாளிகையில்; காதல் நண்பு - அன்போடு கூடிய நேசத்தை; பழனமூதூர் - திருப்பழனம் என்னும் பழமையான ஊரில்; நாதர் தம் - தலைவரான சிவபெருமானுடைய; காதல் + நண்பு + அளித்து = காதனண்பளித்து. பல + நாள் = பன்னுள்.

43. ஆன்ற - நிறைந்த; பூதி - திருநீறு; அணிந்தார் : வினையாலணையும் பெயர். வேய்ந்த - அணிவித்த; ஊதியம் - நன்மை.

44. அரசின் நாமம் - திருநாவுக்கரசரின் திருப் பெயர்; ஏத்தி - பெருமிதத்தோடு போற்றிச் சொல்லி ; மன்று - பொன்னம்பலம்; நவ்வி - மான்; அம் - அழகிய; கண்ணாள் - கண்ணையுடையவள், மான் போலும் அழகிய கண்ணையுடைய உமாதேவி என்றபடி.

45. மான்மறிக்கையர் - மானைக் கையிலே தாங்கியுள்ள இறைவன்; அடைவால் - தகுதியால்; கான் - காடு; கமல வாவி - தாமரைப் பூக்கள் நிறைந்த குளம்; கழனி - நன்செய் நிலம்; நவிலல் - சொல்லுதல்.

5. கம்ப ராமாயணம்

1. ஆறு - அழிவில்லாத; பொன்மால்வரை - அழகிய பெரிய இமயமலே; நனி : உரிச்சொல்.

2. அனிகம் - சேனே; எழுக - வியங்கோள் வினைமுற்று; கைப்போதகம் - துதிக்கையுடைய யானே.

3. கழல் - திருவடி; தானியாகு பெயர். மன்மக்கள் - அரச மக்கள்; வயின் - பக்கம்; உக்கு - நெகிழ்ந்து; உய்ப்பது - செலுத்துவது.

4. நெடுமுடி : பண்புத் தொகை. மழை - மேகம்; வீரன் - இராமன்.

5. அளவை - நேரம்; நாகம் அன்ன - யானே போன்ற (தசரதன்); நடவான் - நடவாஞய், முற்றெச்சம். வந்தான் - வந்தவன், வினையாலணையும் பெயர்; மாகம் - ஆகாயம்; மயில் வலம் வருதல் நற்சகுனம்; காக்கை இடம் வருதல் தீய சகுனம்.

6. நினைவாளன் - புள் நிமித்தகன்;

7. புடை - பக்கம்; மழு - கோடரி; கால்வான் - உமிழ்பவன்; உன்னும் - கருதத் தக்க; உரும் - இடி; உரை - சொல்.

8. கலம் - மரக்கலம்; கம்பித்து - நடுங்கி; உலைய - நிலைகெடும்படி; சலியா - சலித்து, பொங்கி, செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம். வெருவுற்று - அஞ்சி; இரிதர - இடம் விட்டு ஓட; தெறியா - தெறித்து; தெரிவான் - ஆராய்ந்து எடுப்பவன்.

9. படி - பூவுலகம்; எண் - கணக்கு; கீறிய - ஒழித்த; புரைய - ஒப்ப, உவமையுருபு.

10. சிகை - கொழுந்து; கதிர் - கதிரவன்.

11. பாழி - வலிமை; சூழி - உச்சி; கேள்வன் - கணவன்.

12. அயிர் - சிறு மணல்; தனி - ஒப்பற்ற; செயிர் - வலிமை; மறம் - வீரம்; திலதன் - திலகம் போன்றவன், கார்த்தவீரியார்ச்சுனன். துணிய - துண்டாகும்படி; தொடு - வீசிய; வடி - கூர்மையான.

13. நிருபர் - அரசர்; ஒரு - ஒப்பற்ற; களை கட்டு - களைகளைப் பறித்து; படிகால் - தலைமுறை; புகு - தன் உடம்பு அமிழும்படி.

14. கமை - பொறுமை; சமைய - பொருந்த; சீறு - சீற்; ஆறு - வழி; சிமயம் - சிகரம்; கிரி - கிரௌஞ்ச மலை, வடி - கூர்மையான.

15. சையம் - மலை; புக - நிலத்தில் அழுந்த; நூறிய - அழித்த; ஐயன் - தலைவன், இராமன்; அது - பரசுராமனது வரவு; நிபம் - காரணம்; எல்வை - சமயம்.

16. விடையா - பெருங்கோபம் கொண்டு; உரும் ஏறு - பேரிடி.

17. ஆராதனை - அதிதி பூசை; விரை - நறுமணம்; அனையான் - அப் பரசுராமன்; கரை - தன் கோபக் கடலுக்கு ஒரு கரை; நெடுமுடிவு - பெரிய ஊழிக்காலம்.

18. பொற்றோள் : பொன் + தோள். நசை - விருப்பம்; செற்று ஓடிய - அழித்து மேம்பட்ட. வரவு : தொழிற் பெயர். உரவோன் : வலிமையுடையவன்.

19. அயர்வான் - மனம் தளர்பவனாய், முற்றெச்சம். ஒரு முனிவன் - காசியபன் என்னும் முனிவன்; அலர் - உனக்கு ஒரு பொருள் அல்லர். இவனும் - இந்த இராமனும்.

20. விளிவார் - இறத்தற்கு உரியவர்; களி - செல்வம்; கல்வி, வலிமை, அதிகாரம் முதலியவற்றால் உண்டாகும் களிப்பு.

21. இதுபிடி - இப்பூமியைத் தானமாக ஏற்றுக்கொள்; நல்கும் - காசியபமுனிவருக்குக் கொடுத்திட்ட; தனி நாயகம் - தனியே அரசாளும் உரிமை; நரபாலர் - மன்னர்; அருளா - அருளி; ஆறினை : முன்னிலை ஒருமை வினைமுற்று.

22. புறம் நின்றவர் - பக்கங்களில் நின்றவர்; அறனின் தரு - தரும வழியாக வந்த; மறவோய் - வீரனே.

23. சலம் - பகைமை; தபும் - ஒழியும்; உலம் - கல் தூண்; நெடியாய் - பெருமைக் குணம் உடையவனே; குறைகொண்டனென் - வேண்டுதல் செய்து கொண்டேன்.

24. என்ன - என்று, செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இகழா - இகழ்ந்து; விழியா - விழித்து; பொன்னூர்கலை - பொன் ஆடை, பீதாம்பரம்; புகுவான் - செல்பவன், பரசுராமன்.

25. ஆனப் - உடுக்கை. உறுவினை - வினைத் தொகை.

26. கால்வன - வீசுவன; உலையா - அழிக்கப்படாதன; சால்வன - பொருநதுவன; கார்முகம் - வில்.

27. நேமி - சக்கரம்; அங்கை = அகம் + கை; விரிஞ்சன் - பிரமன்.

28. வேரி - மணம்; வினையம் - உபாயம்; மொய் அமர் - வலிய போர்.

29. வெருவர - அஞ்ச. வெம்மை + கனல் = வெங்கனல், பண்புத் தொகை.

30. இருசிகன் - ஒரு முனிவன்.

31. எந்தை - என் தந்தையான சமதக்கினி முனிவன். நொய்தின் - எளிதில்; கேட்டி - கேள் + தி = கேட்பாய்.

32. ஊனம் - பழுது; ஊக்கம் - சிறப்பு; வழிப்பகை - பழைய பகை; ஈனம் - பழி; சலித்து - கோபம கொண்டு.

34. முனிவன் - காசியப முனிவன்; அலகு + இல் = அளவு இல்லாத; தனு - வில்; மலைகுவென் - போர் புரிவேன்.

35. துன்று - நெருங்கிய; இரு சடை - பெருஞ்சடை; வாங்கி - வளைத்து; முறுவல் - வீரத்தெழுந்த கோபச் சிரிப்பு.

36. இயம்புதி - சொல்லுவாய்; இலக்கம் - குறிப்பொருள்.

37. முனிந்திடல் - முனியாதே; அலங்கல் - துளசி மாலை; வேதியா - வேறுவேறாய்.

38. பொலம் - அழகு; வனை - அலங்கரிக்கப்பட்ட.

40. முற்றுக : வியங்கோள் வினைமுற்று. மண்ணிய - தூய்மை செய்யப் பெற்ற; கண்ணி - தலைமாலை; கலைகண் - பற்றுக்கோடு.

41. அமலன் - குற்றமற்றவன், இராமன். ஐ உணர்வு - ஐம்புல உணர்வு; ஐம்புலன் - ஊறு, சுவை, ஒளி, ஓசை, நாற்றம். ஐம்பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி; புக்கு - சென்று; புகு + உ — பகுதி ஒற்று இரட்டித்து இறந்த காலங் காட்டியது; உ - வினையெச்ச விகுதி புணர்ந்து கெட்டது.

42. விழுமம் - துன்பம்; தளிர்ப்பு - மன எழுச்சி; கோடு - எல்லை; இலா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

43. பரிவு - அன்பு; வரிசிலை - கட்டமைந்த வில்; கலசம் - சிறு பாத்திரம்; கண் எனும் கலசம் : உருவகம்.

44. சிறுமை - இளம்பருவம்; பொய்ம்மை - வஞ்சனை; ஆண் தொழில் - வீரத் தொழில். உலகு - உலகத்தவர், இடவாகு பெயர்.

45. புகுந்த - அங்கு அருகில் வந்து சேர்ந்த; மானம் - பெருமை; சேமி - காப்பாயாக; நாமம் - பெருமை.

46. தானையான் - சேனையை உடையவன்; தசரதன்.

47. முதுதாதை - பாட்டனுன கேகய நாட்டு மன்னன்; வளை - சங்கு; முரல் - ஒலி.

48. ஏவலும் - கட்டளையிட்ட அளவில்; இறைஞ்சி - வணங்கி; சேவடி - செம்மை அடி; ஓவல் - நீங்குதல்.

49. உளை - பிடரி மயிர்; உதாசித்து - கேகய மன்னனுடைய மகன்; நளிர் - குளிர்ந்த.

50. அரசர் கோமான் - தசரதன்; வானவர் செய்த மா தவம் - தேவர்கள் (இராவணன் முதலியோரை அழிக்கும் பொருட்டுச்) செய்துள்ள பெருந்தவம்; விளம்புவாம் - சொல்லுவோம்; நனி - மிகுதியாக, உரிச்சொல்.

6. கலிங்கத்துப் பரணி

1. இகலொலி - பகையால் மாறுபட்டுச் செய்யும் ஒலி. இகக்க - கடக்க, மிக. பரி - குதிரை. கரி - யானை.

2. வெருவர - அச்சம் தோன்றுமாறு. தெழி - ஆரவார ஒலி.

3. மலைத்தபோல் - மாறுபட்டுப் போர் செய்தாற் போல.

4. முனைத்தபோல் - போர் செய்தன போல்.

5. அரி - சிங்கம்;

6. உரும் - இடி, வடிகணை - கூர்மையாக்கப்பட்ட அம்பு, அம்புமழைபோல் மிகும்படி.

7. குருதியினதி - ஆறுபோன்ற இரத்த வெள்ளம்.

8. மருப்பு - யானைக் கொம்பு, தழல் கதுவ - தீப்பற்ற.

9. உகக்கடை முடிவு - யுகத்தின் இறுதியான அழிவுக் காலம். வடவனலம் - வடவைத் தீ துரகக்கணம் - குதிரைக் கூட்டம்.

10. கழை வனம் - மூங்கிற் காடு.

13. வகிர் - பிளவு.

14. அகலம் - மார்பு.

16. இறைஞ்சினர் - வணங்கினர். என - என்று.

17. கலிங்கம் - கலிங்க நாடு, ஆடை.

18. அபிதாவிடல் - அபயம் இடுதல், சரணடைந்து காப்பாற்றுக என வேண்டுதல்.

19. அப்பிரமண்ணியமிடுதல் - அபயம் இடுதல்.

22. கடகரி - மதயானை, வயமா - வலிமையுள்ள குதிரை.

7. வில்லிபுத்தூரார் பாரதம்

1. வல் - சூது, கல் - மலை; கோவர்த்தன மலையை எடுத்துக் குடையாகப் பிடித்து அழிவு செய்ய வந்த பெருமழையைத் தடுத்த செயலைக் குறிப்பிட்டது காண்க. கரிய மாமுகில் - கண்ணன்.

3. கரியமாப்புயல் - மேகம் போன்ற கருநிறத்தினனாகிய கண்ணன். மொழிமின் - மொழியுங்கள்.

4. கண்ணிலா அரசன் - திருதராட்டிரன்.

5. முரச கேதன - முரசம் கொடியாக உடைய தருமனே!

6. பரசினேன் அடி - அடி வணங்கினேன்.

7. அரவ வெங்கொடியோன் - பாம்புக் கொடியுடைய துரியோதனன்.

8. விந்தமன்ன - விந்திய மலை போன்ற.
அறன் மகன் - தருமத்தின் மைந்தன், தருமன்.

10. இலஞ்சி - பொய்கை.

11. மலைகுவம் - போர் செய்வோம். கன்றியே அடல் - வெகுண்டு போர் செய்து அழிக்கின்ற.

12. பூசை - பூனை. இருந்துழி - இருந்த இடத்தில். இகல் - வீரர்களின் மாறுபாடு. துன்று பூசல் - நெருங்கும் போர்.

13. மேதினி - பூமி, அரசுரிமை. செல்வி - திருமகள். தூரியளாய்விடும் - நீங்கிவிடுவாள்.

14. தனஞ்சயன் தனு - அருச்சுனன் வில்.

15. கழந்தன்று - கழிந்தது. நாடினை எனின் - கருதினாய் என்றால்.

18. வயவாளி - வலிமையுடைய அம்பு, வெருநர் - அஞ்சியவர்.

19. சர்ப்ப கேதனன் - பாம்புக் கொடி உடையவன், - துரியோதனன்.

8. முத்தொள்ளாயிரம்

1. அள்ளல் - சேறு, பழனம் - வயல், அரக்கு - செந்நிறம், வெரீஇ - அஞ்சி, கோதை - சேரன்.

பகைவரால் நேரும் போர் ஆரவாரமும் தீயிடல் முதலிய கொடுமைகளும் சேரநாட்டில் இல்லை என்றும், இயற்கை நிகழ்ச்சிகளைக் கண்டு அவ்வாறு மயங்கும் நிலையே உண்டு என்றும் கூறி நாட்டு வளத்தைப் புகழ்ந்து, அரசனின் வீரமும் செங்கோன்மையும் கூறியவாறு.

2. கலிகள் - களிப்புத் தரும் கள், இங்கு அதனைக் குடிப்பவர். விதிர்த்திட்ட - கையால் எறிந்து சிதறி விட்ட.

3. கொல்லியர் - கொல்லி மலை உடைய சேரர்.

சேர மன்னனுடைய நாட்டின் பரப்பு, அவனுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசருடைய தொகை, அவர்களிடையே அவன் பெற்ற பெருமை இத்தகையன என்று புகழ்ந்தவாறு.

4. சோழநாட்டு வயல் வளமும் வேந்தனது படைப் பெருமையும் கூறியவாறு.

5. பல வண்ணப் பூக்கள் கிள்ளி எறியப்படுமாதலால் அக்காட்சி வானவில் போல் தோன்றியதாம்.

சோழ நாட்டுத் தலைநகராகிய உறந்தையில் மக்களின வளமான வாழ்வு இத்தகையது எனக் கூறப் பட்டது.

6. இரேவதி - சோழன் பிறந்த நாள். நாவலர் - புலவர். மந்தரம் - ஒரு மலை. பிறந்த நாள்விழாவில் பலரும் சிறந்த பரிசு பெற்று மகிழ, சிலந்திகள் மட்டும் கூடும் இழந்து வருந்தின என்றார். மாடமாளிகைகள் அலங்காரம் செய்வதற்காக வண்ணமும் சுதையும் தீட்டப் பெற்றமையால், சிலந்திக் கூடுகள் அழிந்தன. சிலந்திகள் தவிர, வேறு உயிரினங்களுக்கு யாதொரு தீங்கும் இடரும் இல்லை என்று குறிப்பிட்டு அரசனுடைய கொடைச் சிறப்பும் குடிமக்களின் நல்வாழ்வும் கூறியவாறு.

7. பார்படுப செம்பொன் - (பாண்டியனுடைய) நிலத்தில் உண்டாகின்றவை செம்பொன். பதிபடுவ - ஊரில் உண்டாகின்றவை. நித்திலம் - முத்து. கூர்வேல் தலைபடுப - கூரிய வேலியின் முனையில் படுகின்றவை. தார்வேந்தர் மார்பு - மாலை யணிந்த பகைவேந்தரின் மார்புகள்.

பாண்டியனின் நிலவளம், தமிழ் வளர்ச்சி, நீர் வளம், மலைவளம், வீரம் ஆகியவை புகழப்பட்டன.

8. நந்தின் இளஞ்சினை - சங்குகளின் இளமுட்டைகள். செம்மற்று - (செம்மல் + து) - தலைமை உடையது. நகை - ஒளி.

9. மடங்கா - பின்வாங்காத, தோல்வியுறாத.
முருகன் கடம்பமாலையை மிக விரும்புவதுபோல், பாண்டியன் தமிழ்ப் பாட்டை மிக விரும்புபவன் எனக் கூறி, அவனுடைய தமிழ்ச் சுவையைப் போற்றியவாறு.

9. சரபேந்திர பூபால குறவஞ்சி

பல்லவி : பிடி - பெண் யானை.

1. தங்கம் - பொன். தங்க - தங்குவதற்கு எனவுமாம். சாபம் - வில்; சபித்தலென்பது மற்றொரு பொருள்.

2. திண்ணன் - கண்ணப்ப நாயனார்; உற - அடைவதற்கு. மூழ்கிடுவீர் - ஆடுவீராக; மூழ்கியிறந்து விடுவீர்களென்பது வேறு பொருள்.

3. மால் - திருமால், மயக்கம்; சிலேடை. இடும்பன் - முருகக் கடவுளுடைய சேவகன், இடும்பனென்பது பிறரை அஞ்சுவிக்கும் இயல்பினனைக் குறிப்பதொரு வழக்கச் சொல்.

4. தூறும் - துளிக்கும், தூங்கல் மலை - ஆனைமலை; தூங்குதலையுடைய மலையென்பது வேறு பொருள். கொல்லி - கொல்லி மலை; கொல்லுவதென்பது மற்றொரு பொருள்.

7. முத்திற்குத் தாரகை உவமை.

10. மாரி வாயில்

1. மஞ்ஞை ஆல-மயில்கள் ஆட; வேய்தர-போர்வை செய்ய; மஞ்சு-மேகம்.

2. வேய்தரும் குழல்கால் ஊத - மூங்கிலாலாகும் குழல் களில் காற்றுப் புகுந்து ஊத; மென்சிறை மெல்லிய சிறகையுடைய பறவைகள்; கலுழி - கலங் கல் நீரருவிகள்.

3. குடகடல் கொடிய மனத்தாருடைய இருள் செறி உள்ளத்தின் ஆழத்தையளக்கும் எனவும், அதன் பக் கல் நின்ற நெடுமலயம் நடுநிலை மனத்தாருடைய சால்பின் உணர்ச்சியைக் காட்டும் எனவும் கூறிய சிறப்பு உணரத்தக்கது.

32161